திராவிடநாடு

1—11—59 | வார வெளியீடு | விலை 16 காசு.

சொல்ல வாரீர்!

—[முத்துதாசன்]—

நாடுதுண்டு ஆகிவிட்டால் நமது மக்கள்
நாதியற்று மடிவாராம் வளமிழந்து!
காடுவெட்டி சீர்செய்த கழனி யெல்லாம்
கரம்பைகளாய் ஆகிடுமாம் திருவிடத்தில்!
பாடுபட்டு உழைக்கின்ற நம்மினத்தார்
பயனற்றுச் சாவாராம் தென்னகத்தில்!
கேடுமதி கொண்டோரின்று பேசுகின்றார்!
கேட்டறிந்த வரலாற்றை மறந்து விட்டு!

முழங்கிவரும் குமரிகடல் முத்தெடுத்து,
முதிர்ந்தசெடிக் காயினிலே மிளகெடுத்து,
வழங்கிவரும் இலவங்கப் பொருளெடுத்து,
வளர்மலையில் ஏலக்காய் தனையெடுத்து,
பழந்தமிழின் பெருமைதனை நிலைநிறுத்தப்
பாய்விரித்துக் கலஞ்செலுத்தி பொன்குவித்த
பழங்கடலே! அலைகடலே! தென்னகத்தின்
பசுமைதனை நீவந்து சொல்ல வாராய்!

பாரிகளும் ஓரிகளும் வள்ளலேறாய்
பவனிவர நல்வளத்தை நீகொடுத்து,
வாரிவளம் குவித்துப்புனல் வழங்கி நித்தம்
வாழைகளைச் சோலைகளை செழிக்க வைத்து,
ஏரிகுளம் மீதினிலே புனல்நிரப்பி
எழில்மிக்க இளம் பெண்ணாய் ஓடி வந்த,
காரிகையே! காவேரிக் கண்ணே! கன்னல்
கனித்தமிழின் சிறப்புதனைச் சொல்ல வாராய்!

அலைகடலே! நில்வளமே! வளவன் பெற்ற
அருங்கொடியே! காவேரி குலவிளக்கே!
மலைவளமே! வான்முகிலே! பெருமை யுற்ற
வரலாற்று ஏடுகளே! தென்றல் காற்றே!
கலைவளர்த்த முடிமன்னர் செயல்கொடுக்கும்
கல்வெட்டுக் கோட்டைகளே! நீங்கள் சற்று
நிலையற்றுப் பேசுகின்ற கயவருக்கு
நீண்டபுகழ் நம்சிறப்பைச் சொல்ல வாரீர்!

ஆங்கில மூலம்: ஷியாம்லால்.

★ நினைவுச் சின்னம் ★

"அன்பு"

இது 1957-ம் ஆண்டின் முற்பகுதியில் நடந்தது. சுதந்திரப் போரின் நூருவது ஆண்டுவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடச் சிற்றூர்களும், பேரூர்களும், நகரங்களும் ஆயத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த நேரம்.

நான் வாழ்ந்த அந்தப் பேரூரின் நகராட்சி மன்றமும் 50,000 ரூபாய் பொருட்செலவில், முதல் சுதந்திரப் போரில் நாட்டுக்காக உயிரை ஈந்த வீரர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் நிறுவமுற்பட்டது. அதற்கென நகரசபையினரால் ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

அக்குழு தெரிந்தோ தெரியாமலோ நினைவுச் சின்னம் நிறுவுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடம், இருபதுக்கும் மேற்பட்ட மண் குடிசைகளைக் கொண்டதாக அமைந்துவிட்டது. அந்த இடம் நகருக்கும் அண்மையில் இருந்தது என்றுகூடச் சொல்லமுடியாது. ஊருக்கும் மேற்கே வெகு தொலைவில்தான் அமைந்திருந்தது.

வாழ்வின் ஒளிதேடி அங்கு வந்து குடியேறியிருந்தனர் அக்குடிசை மக்கள். அங்கு அவர்களுக்கு வயிற்றை நிரப்பும் வேலை வசதிகள் கிடைப்பது அரிதாயிருந்தாலும், கூனிக்குறுகி உள்ளே செல்லக்கூடிய குடிசைகள் கட்டிக்கொள்ள மண் கிடைத்தது. ஆண் பெண் ஆகிய அத்தனை பேரும் உழைத்தும் ஒருவருக்காகிலும் போதுமான உணவு கிடைக்காத நிலையில் உழன்றூர்கள்.

ஒரு நாள் நினைவுச் சின்னம் நிறுவப்போகும் இடத்தைப் பார்வையிடுவதற்காக நகராட்சி மன்றத் தலைவர், பொறி இயல் வல்லுநரோடும், மற்றவர்களோடும் வந்திருந்தார். "ஆமாம்; இவைகளை வைத்துக்கொண்டு இந்த இடத்தில்..." என்று குடிசைகளைச் சுட்டிக்காட்டித் தலைவரை நோக்கிக் கேட்டார் பொறி இயலார். "அவைகளைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள்? குடிசைகளையெல்லாம் அப்புறப்படுத்திவிடலாம்!" என்று அலட்சியமாக மொழிந்தார் தலைவர்.

"நான் அதற்காகச் சொல்லவில்லை. காலம் அப்படி இருக்கிறது ...திடீரென்று போராட்டம் என்று ஏதையாவது ஆரம்பித்தார்களானுல்..." என்று இழுத்தார் பொறி இயல் அதிகாரி.

"அதெல்லாம் ஒன்றும் முடியாது. இவ்வளவு நாட்களாக இந்த இடம் நமக்குத் தேவையாயில்லை. அவர்கள் அனுபவித்துக் கொண்டார்கள். இப்போது இது நமக்கு அவசியப்படுகிறது. அதுவும் ஒரு புனிதமான காரியத்திற்காக. எனவே இந்தக் குடிசைகளை அப்புறப்படுத்த நகராட்சி மன்றத்திற்கு எல்லாவித உரிமையும் உண்டு" என்று தனது பதவியின் எல்லையைக் கோடிட்டுக் காட்டினுர் தலைவர்.

"ஆனுல் ஒன்று செய்யலாமே' குடிசைகள் இருக்கும் இடத்திற்கு அருகிலேயே மற்றொரு திறந்த வெளி இருக்கிறது. அங்கு நினைவுச் சின்னத்தை அமைத்தாலென்ன? இதனுல் நமது எண்ணமும் நிறைவேறும்; குடிசைகளும் அப்புறப்படுத்தவேண்டிய நிலை எழாது." ஒரு மூலையிலிருந்து குடிசை மக்கள் சார்பாக இக்குரல் வந்தது.

'இந்த யோசனையின்படி நடந்தால் ரூபாய் ஐம்பதினுயிரமும் பாழ்தான். குடிசைக்குப் பக்கத்தில் இவ்வளவு ரூபாய் போட்டு ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவதும் ஒன்றுதான், எழுப்பாமல் சும்மா இருப்பதும் ஒன்றுதான். இந்த மண் குடிசைகள் நினைவுச் சின்னத்தின் அழகையே கெடுத்துவிடுமே" நகரமன்றத்தின் துணைத்தலைவர் மிகுந்த கோபத்துடன் கூறினுர்.

"பாவம் வேறு வசதியேதுமில்லாத அந்த ஏழைகள் வேறு எங்கே குடியேறுவார்கள்? அவர்களைப்பற்றிச் சிறிது எண்ணிப் பாருங்கள்" மீண்டும் அந்த பன்மு[...] குரல் ஒலித்தது. ஆனுல் அதை யாரும் செவிமடுத்தாகத் தெரிய வில்லை.

அதற்குள் தலைவர் அனுப்பியிருந்தஆள், அக்குடிசை மக்களுள் ஒரு கிழவரைத் தலைவர் அழைப்பதாகக் கூறி அழைத்துவந்தான்.

ஏய்கிழவா! இன்னும் ஒருவாரத்திற்குள் நீங்கள் குடியிருக்கும் இந்தக் குடிசைகளையெல்லாம் அப்புறப்படுத்தவேண்டும். தெரிந்ததா? என்று அவன் வந்ததும் வராததுமாக ஆணை பிறப்பித்தார் தலைவர்.

"ஐயா, என்ன இது? தாங்கள் ஏன் இவ்வளவு கோபமாகப் பேசுகிறீர்கள்? நாங்கள் யாருக்கும் எந்தத் தவறும் செய்யவில்லையே. எதற்காக எங்கள் குடிசைகளை அப்புறப்படுத்தச் சொல்லுகிறீர்கள்?" பதறினுன் அந்தக்கிழவன்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இந்தப்பகுதி இன்னும் ஒரு வாரத்திற்குள் வெற்றிடமாகக் காணவேண்டும், அவ்வளவுதான் சொல்வேன்!"

"ஐயா, இதை அப்புறப்படுத்தி விட்டால் நாங்கள் வேறெங்கே போய்க் குடியேற முடியும்? கொஞ்சம் கருணைகாட்டுங்கள்; உங்கள் குழந்தைகளுக்கு மிகவும் புண்ணியமாகப்போகும். ஐயா! ஏழைகள்மீது இரக்கம்வையுங்கள்!" கெஞ்சினுன் கிழவன்.

'நாங்கள் சொல்லுவதைச் செய்யப்போகிருயா அல்லது உன[...] புராணத்தைத்தான் படிப்பே[...] என்கிருயோ? நீ இப்போது வி[...]டுக்கொண்டிருக்கிருயே சுதந்[...] மூச்சு, அதற்கு வழிகோலிய[...] களுக்காக இந்த இடத்தில் ஒ[...] நினைவுச் சின்னம் எழுப்பப்போ[...]ரும். அந்த ஒரு புனிதமான கா[...]யத்திற்காகக் கேவலம் உங்கள்ம[...]

(13-ம் பக்கம் பார்க்க)

வழி, இதோ!

[18] ஆண்டுச்சந்தா ரூ. 8. (1—11—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 16

இரண்டு மாதங்கள்கூட ஆகிவிடவில்லை, அந்த இனிக்கின்ற சேதி வந்து. ஆண்டாண்டு காலமாக அவதிப்படுகின்ற கைத்தறியாளரின் துயர் தீர்ந்திட ஓர் மார்க்கம் பிறந்தது — அவர்தம் வாழ்க்கையில் பொலிவு ஏற்படவோர் வழி கிடைத்தது — என்று அவர்தம் நலனிலே அக்கறை காட்டுகிற அனைவரும், மகிழ்ச்சியோடு வரவேற்றனர் அந்தச் செய்தியை.

காஞ்சிபுரம் பட்டுக்கும்—பெங்களூர் 'சில்க்'குக்கும்—சேலம் குண்டஞ்சிக்கும்—மற்றும் பல பெயர் பெற்ற கைத்தறித் துணிகட்கும், அமெரிக்க நாட்டில் நல்ல கிராக்கி இருக்கிறதென்று சபாநாயகம் என்பார் செய்தி வெளியிட்டபோது நாடே மகிழ்ந்தது. இந்தத் துணைக்கண்டத்தை—சிறப்பாகத் தென்னகத்தை—வாட்டி வருகின்ற பெரியதோர் பிரச்சினை, பல இலட்சக்கணக்கானோரின் வாழ்வுப் பிரச்சினை, தீர்ந்திட வழி பிறந்தது என்று எண்ணினோம் நாம்!

காஞ்சிபுரம் துணியின்மீது அந்த நாட்டு அழகிகட்கு ஏற்பட்டிருக்கின்ற மோகத்தையும், பெங்களூர் சில்க் என்றால், எந்த அளவு ஆசையோடு அவர்கள் உடுத்தி மகிழ்கிறார்கள் என்பதனையும் அவர் கூறிய போது, பலருக்கு, ரோமாபுரி இராணியரின் உடலை அலங்கரித்த தமிழகத்து மஸ்லின் நினைவு வந்திருக்கக்கூடும். —எகிப்து நாட்டு இராணியரும், பாபிலோனியாப் பாவையரும், அந்தத் துணிகளை உடுத்ததிலே பெற்ற பெருமிதம், கற்பனைக் கண் முன்னாலே நின்றிருக்கக் கூடும்!

அடுத்து ஒருவர் — சி. பி. கிருட்டினன் என்பார்—அகில இந்திய கைத்தறி நிறுவனத்தின் உறுப்பினர் அவரும், அமெரிக்காவிலே கைத்தறித் துணிக்கு ஏற்பட்டிருக்கிற கிராக்கியை எடுத்துக் கூறியிருக்கிறார், கடந்த வாரம், பம்பாயில். இதோ அவருடைய கருத்துரை,

"இந்திய கைத்தறித்துணியை ஊக்குவிக்க அண்மையில் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக ரூ. 6 கோடி பெறுமான கைத்தறித் துணிக்கு, அமெரிக்காவில் தேவை பெருகியிருக்கிறது. கைத்தறித் துணியை அமெரிக்காவில் பரப்ப அயராது பாடுபட்டால், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20 கோடி மதிப்புள்ள துணிகளை ஏற்றுமதி செய்ய முடியும்."

அழகி—கற்பனைக்கெட்டாத அற்புதப் பாவை—காவியங்களுக்கு மூலமாக விளங்கிடத்தக்க மின்னொளியினள்—கண்டோர் வியந்திடும், மனம் நெகிழ்ந்திடும்; காரிகை—அவளோடு ஆடிப்பாடி, மகிழ்ந்து, ஊஞ்சலில் அமர்ந்து உவகை மிக்குற்று, "எந்நிழையே எனை மறப்பாயோ?" எனப் பல இன்பக் கதை பேசி, இருப்பது இவ்வுலகிலா அன்று இன்பலோகம் என்பார்களே, அந்தப் பெருவுலகிலா என்று ஐயுற்று, ஆரணங்கின் அரவணைப்பில் அழியாத பேரின்பம் கண்டு கடைசியில், கண்விழித்துப் பார்த்து, இத்தனையும் கனவென்று தெரிந்த பிறகு, அந்தக் கனவுலகில் சஞ்சரித்த இளைஞனின் உள்ளம் என்ன பாடுபடும்!

அந்த உள்ளத்தினைப்போல், பரிதாபத்துக்குரிய நிலையிலேயிருக்கிறது, தென்னகம்!

இருபது கோடி ரூபாய் பொறுமான கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்ய வாய்ப்பிருக்கிறது என்று சபாநாயகம் என்பார் செய்தி தெரிவிக்கிறார். அதோடு தென்னகத்தில், விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கிற கைத்தறித் துணியின் மதிப்பு ஏறக்குறைய ரூ. $4\frac{1}{2}$ கோடி என்றும் செய்தி வருகிறது.

இப்படித் தேங்கிக் கிடக்கின்ற துணிகளை என்ன செய்வது? இவற்றை விற்பனை செய்யும் வழிவகைகள் என்னென்ன, என்று ஆராய்ச்சி செய்திடும் பொருட்டு, கடந்த வாரம் சென்னையிலே கூடியிருக்கின்றனர், கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பாளர்கள்.

தென்னகத்திலேயுள்ள நான்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் கூடினர்—பேசினர் — கடைசியில் ஒரு முடிவுக்கும் வந்தனர்.

ஆந்திரத்தில் தேங்கியிருக்கிற துணிகளைத் தமிழகமும், தமிழகத்திலே தேங்கியிருக்கிற துணிகளை ஆந்திரமும் பெறுவது—இப்படித் தென்னக மாநிலங்கள் நான்கும் ஒன்றிலே தேங்கியிருக்கிற துணிகளை மற்றொன்று வாங்கிக் கொள்வது—என்று முடிவு செய்தார்கள்.

தேங்கிக் கிடக்கிற துணிகளை விற்பனை செய்யும் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட அனைவரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் — அவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சிக்காக!

ஆனால், இந்த முயற்சி, அதன்பலனாக எடுக்கப்பட்ட முடிவு, எந்த அளவு பலன் அளிக்கவல்லது,

என்பதை எண்ணிப்பார்க்கும்போதுதான் வேதனை ஏற்படுகின்றது.

துணிகள் தேங்கியிருப்பது ஒரு மாநிலத்திலல்ல—தென்னகத்திலே உள்ள நான்கு மாநிலங்களிலும்!

ஏதாவது ஒரு மாநிலத்திலே மட்டும் துணிகள் தேங்கிவிட்டிருந்து, மற்ற மாநிலங்களில் அத்தகு வேதனைக்குரிய நிலை இல்லாமலிருந்தால், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் துணிகளை மாற்றுவதன் மூலம், பிரச்சினை ஓரளவு தீர்க்கப்படக்கூடும்.

கைவிரலிலே மட்டும் தேள் கொட்டியிருந்தால், கொட்டிய இடத்திற்கருகில் கட்டுப்போடுவதன்மூலம், மற்ற இடங்களில் விஷம் பரவாமல் தடுத்துவிட முடியும். ஆனால், தேள் கொட்டியிருப்பது கைகால்களிலே மட்டுமல்ல, கழுத்திலும் கூடத்தான், என்னும்போது வேறு வைத்தியம் பார்க்கவேண்டுமே தவிர, விஷம் பரவாமல் தடுக்க வழியில்லை.

அதைப்போல், தென்னக முழுவதிலுமே கைத்தறித் துணிகள் தேங்கியிருக்கின்ற சூழ்நிலையில், அந்தத் துணிகளை வேற்றிடங்கட்கு ஏற்றுமதி செய்வதுதான் பிரச்சினை தீருவதற்கான வழியே தவிர, ஒரு மாநிலத்திலிருந்து மற்றோர் மாநிலத்திற்கு அந்தத் துணிகளை மாற்றிவிடுவதன் மூலம், எந்தப் பலனையும் நாம் பெற்றுவிடமுடியாது.

இந்தப் பிரச்சினை, நெசவாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களால் மட்டுமே தீர்க்கப்படக்கூடியதோர் பிரச்சினையல்ல!

"அயராது உழைத்தால் ரூ. 20 கோடி பெறுமான வாய்ப்பிருக்கிறது"—இது கிருட்டினன் அவர்கள் கூறியிருக்கிற கருத்து!

அந்த உழைப்பு—அமெரிக்காவில் நமது நாட்டுக் கைத்தறித் துணிகட்கு 'மவுசு' ஏற்படுகின்ற வகையில் செய்யப்படவேண்டிய முயற்சி — ஆட்சியாளர்களிடமிருந்து வந்தாகவேண்டும்! தனிப்பட்டோராலோ, அல்லது தனிப்பட்ட அமைப்புகளாலோ, செய்து முடிக்கப்படக்கூடிய காரியமல்ல இது! ஆட்சிப்பீடத்திலுள்ளோர் தலையிட்டாகவேண்டும் — நெசவாளர்தம் துயர் துடைத்திட முனைந்து பணியாற்றவேண்டும்!

ரூ. 20 கோடி மதிப்புள்ள கைத்தறித்துணிகளை ஏற்றுமதிசெய்ய, நல்லதோர் வாய்ப்பு இருக்கிறது என்பது தெரிந்தும்—ரூ. 4½ கோடி பெறுமான துணிகள் இங்கே தேங்கிக்கிடக்க விட்டுவைத்திருப்பது, பொறுப்புள்ள ஆட்சியாளர்களுக்கு ஏற்றதல்ல!

எனவே, ஆட்சியாளர்கள், கொஞ்சம் கண் விழித்துத், கைத்தறித்தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற பல இலட்சக் கணக்கானோரின் வாழ்வினில் ஒளியேற்றி வைக்கவேண்டுமென வேண்டுகிறோம் செய்வார்களா?

—[❋]—

தலைமைக் கழக அறிக்கை 5/59.

தி. மா. மு. க.
கிளைக்கழக
அமைப்பறிக்கை

நாடெங்கும் உள்ள திராவிட மாணவர் முன்னேற்றக் கழகங்கள் உடனடியாகத் தலைமைக்கழகத்தில் பதிவு செய்துகொள்ளவேண்டும். கிளைக் கழகங்கள் இல்லாத கல்வி நிலையங்களில் மாணவத் தோழர்கள் புதிய கிளைக் கழகங்கள் அமைக்க முயற்சி எடுக்க வேண்டுகின்றேன். ஆண்டுதோறும் சனவரித் திங்களில் கழக நிர்வாகிகளை புதுப்பிக்க வசதி ஏற்படும் வகையில் புதிதாக அமைக்கப்படவேண்டும். கழகங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகள் 1960-டிசம்பர் வரையிலும் கல்வி நிலையங்களில் தொடர்புள்ளவராக தேர்ந்தெடுக்கப்படுவது நலம்.

அமைப்பு முறைகள்

1. பழைய கிளைக்கழகங்கள் அனைத்தும் உடனடியாகத்தலைமை கழகத்தில் பதிவுசெய்துகொள்ள வேண்டும்.

2. புதிதாக அமைக்கப்படும் கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது 25-உறுப்பினர்கள் இருக்கவேண்டும் அந்த உறுப்பினர்களைக் கொண்ட 15-பேருக்கு மேற்படாத செயற்குழுவை அமைத்துக்கொள்ள வேண்டும்.

3. உறுப்பினர்கள் ஆண்டுக் கட்டணம் 25-புதியகாசுகளாகும்.

4. கலைக்கல்லூரிகள், தொழிற் கல்லூரிகள், தமிழ்க் கல்லூரிகள், தொழிற்பள்ளிகள் ஆகியவைகள் தனித்தனி கிளைக்கழகங்கள் அமைக்க உரிமை பெற்றவையாகும்.

5. உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் பள்ளிக்கொரு கிளைக்கழகம் அமைக்காது, ஊருக்கொரு கிளைக் கழகம் அமைத்துக்கொள்ள வேண்டும். அதாவது ஒரு ஊரிலுள்ள பல்வேறு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ஒன்றாகக்கூடி ஒரு கிளைக் கழகம் அமைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் நகரசபைகளில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் அனுமதி வாங்கிய பிறகு அமைக்க உரிமையுண்டு.

6. ஒவ்வொரு கிளைக் கழகமும் செயலாளர், பொருளாளர், துணைச் செயலாளர், 15-பேருக்கு மேற்படாத செயற்குழுவினர் ஆகியோரைத்தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த ஆண்டு கல்வி நிலையங்கள் திறந்து சில திங்கள் கழிந்ததால் செயலாளர், துணைச்செயலாளர். பொருளாளர் ஆகியோர் இறுதி வகுப்புகளில் இல்லாமல் இருப்பது நலம்.

7. கிளைக் கழகங்கள் அமைக்கப்பட்ட விவரத்தை உடனடியாக தலைமை நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும்.

8. அமைப்புமுறையைத்தலைமை நிலையத்தில் பரிசீலனை செய்த பிறகு "நம்நாடு" இதழில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும்.

அன்பன்

எஸ். டி. சோமசுந்தரம்

அமைப்பாளர் - பொதுச்செயலாளர்

சிதம்பரம், தி. மா. மு. கழகம்.

27-10-'59.

இலக்கியமும் ஓவியமும்

இலக்கியத்திற்கும் ஓவியத்திற்கும் நிறைய ஒற்றுமை உண்டு. சில இடங்களில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் பெரும்பாலும் இவைகளைப்பற்றிய முழு விபரத்தையும் அறியும்போது ஒற்றுமை மலிந்திருப்பதையே காணலாம்.

பாரசீகப் புலவர் உமர்கய்யாம் அவர்கள் தம்முடைய கவி ஒன்றில் கூறுகிறார். "நம் கண்களுக்குத் தெரியாத சொர்க்க பூமியைப் பற்றி எப்படி எப்படியோ கேள்விப்பட்டு அந்த இடத்திற்கு நாம் செல்லமாட்டோமா? அங்கு சென்று ஆனந்த வாழ்க்கையை நுகரமாட்டோமா? என்றெல்லாம் வாழ்நாள் முழுவதும் கனவு காண்பவர்களுக்கு நான் ஒரு வழி சொல்ல ஆசைப்படுகின்றேன். நான் குறிப்பிடும் மூன்று பொருள்களும் ஒரு மனிதனுக்கு இவ்வுலகில் கிடைத்துவிட்டால், அம்மனிதன் சொர்க்கலோகத்தில் இருந்தாலும் அப்படியொன்று கிடைக்காத அனுபவத்தை இங்கேயே அனுபவிக்கலாம். வாழ்வே வளமிக்க பூஞ்சோலையாகச் சென்று கொண்டேயிருக்கும். அம்மூன்று பொருள்களும் என்னவென்றால் 1. நல்ல இலக்கியம். 2. உயர்ந்த அறிவு. 3. அறிவு படைத்த அழகிய பெண். இம்மூன்றும் கிடைத்துவிட்டால் மனிதன் வாழ்க்கையிலிருந்து கவலையையே விரட்டி அடித்து விடலாம். சொர்க்கலோகத்தைப் பற்றிய கனவே காணாமல் இருந்து விடலாம்" என்று அழகுபடக் கூறியுள்ளார்.

ஒருவனுக்கு உள்ளத்தை உற்சாகப்படுத்த உயர்ந்த இலக்கியமும், இன்பத்தின் உச்சத்திலே துன்பத்தையே மறந்து இருக்கக் கருத்து நிரம்பிய அறிவும், இத்தகைய இன்பத்தினிடையே இதயம் கவர்ந்த இல்வாழ்க்கை வாழ இன்சொல் பேசி மகிழ வைக்கும் பெண்ணும் இருந்துவிட்டால், அவனுக்கு இவ்வுலகில் வேறு என்னதான் வேண்டும்.? வேறு எதைப் பற்றித்தான் சிந்திக்கவேண்டும்?

இதை ஏன் இங்கு குறிப்பிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்றால், மனிதனின் இன்பத்திற்கு முதலிடம் கொடுப்பது இலக்கியம் தான் என்று அப்புலவர் கூறுவதனால்... அவர் மட்டும் அல்ல, எவரும் கூறத் தயங்காததால். இலக்கியத்திலே ஓய்ந்துபோன உள்ளத்தைத்தட்டி எழுப்புவதற்கு ஒப்பற்ற ஆற்றல் உண்டு......

அ. ஹபீப்முஹம்மது

இலக்கியற்திற்கு உள்ள அந்த ஒப்பற்ற ஆற்றல் ஓவியத்திற்கும் உண்டு.

இனி, இலக்சியத்திற்கும், ஓவியத்திற்கும் உள்ள ஒற்றுமைகளைக் காண்போம். உயர்ந்த ஒரு இலக்கியத்தைப் படிக்கும்போது அதனுடைய ஆழ்ந்த கருத்துக்கள் அமைதியற்ற உள்ளங்களிலேயும் புகுந்து இன்பத்தில் ஆழ்த்திவிடும். சிந்திக்கவும் தூண்டும். அதே போனறு அழகிய ஒரு ஓவியத்தைப் பார்க்கும்போதும் மனம் மெய்மறந்திருக்கும். உயர்ந்த ஓவியத்தினிடையே காணப்படும் முக்கிய பகுதிகளும் மனதிடையே கற்பனை உணர்ச்சியைத் தூண்டிவிடும்.

இலக்கியத்தை உருவாக்குபவர்களின் உள்ளத்தை ஆராயும்போது, அவர்கள் உள்ளம்கற்பனை நிறைந்ததாகவே காணப்படும். அதேபோன்று ஓவியர்களின் மனமும் கற்பனையின் உறைவிடமாகவே இருக்கும். இந்த இருவருடைய சிந்தனையும் தாங்கள் உருவாக்கும் படைப்புகளுக்கேற்றவாறு எந்த நேரமும் புதிய புதிய எண்ணங்களைத் தாவிச் சென்ற வண்ணமாகவே இருக்கும்.

இலக்கிய கர்த்தாக்கள் இலக்கியத்தை எழுதி முடிக்கும் வரை அவர்களது மனம் வேறு எச் செய்கையின் மீதும் செல்லாது. ஓவியர்களும் சிறந்த ஓவியம் உருவாகும் வரை அவர்களதுஉள்ளமும்மற்றக் காரியங்களில் ஈடுபடாது. இவர்கள் தாங்கள் எடுத்த காரியத்தை முடிக்காமல் வேறு பணியில் ஈடுபடவேமாட்டார்கள்.

இவர்களுடைய சூழ்நிலையைப் பார்க்கும்போது நமக்கெல்லாம் வேடிக்கையாகவே காணப்படும். ஓவியர்களது அறைகளைப் பார்க்கும்போது தூரிகைகளும், வண்ணங்களும் பல இடங்களில் சிதறிக் கிடக்கும். பார்ப்பதற்குக்கூடச் சிற்சில சமயங்களில் என்னவோபோல் இருக்கும். அந்த நேரத்தில் ஓவியர்களைப பார்த்தால்கூடச் சித்தப்பிரமை கொண்டவர்கள்போல் காணப்படுவார்கள். கொஞ்சம் படம் வரைவார்கள். பின் தூரத்தில் வைத்துப்பார்ப்பார்கள். திருத்தம் செய்வார்கள்.. மீண்டும் பார்ப்பார்கள்... மேற்கொண்டும் அழகு செய்வார்கள். இது நமக்கு அலுப்

பாகத் தோன்றினாலும், ஓவியர்கள் தங்கள் காரியத்தை மிகுந்த ஊக்கத்துடன் செய்துகொண்டே இருப்பார்கள். ஓவியர்களின் அறைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் புதுமையானர்கள் என்றே கூறவேண்டும். இலக்கியம் உருவாக்குபவர்களின் இருப்பிடமும் ஏறத்தாழ இதே நிலைமையில்தான் இருக்கும். கையில் எழுதுகோலும், காகிதமும் கொண்டு இங்கேயும், அங்கேயும் அலைந்து கற்பனையை அணைத்துக்கொண்டபின் எழுத முற்படுவார்கள். கருத்துக்கள் அவர்கள் மனதிற்குப் பிடிக்காவிட்டால் கசக்கி எறிந்துவிடுவார்கள். மீண்டும் எழுத ஆரம்பிப்பார்கள். இவர்களது அறைகளைப் பார்த்தாலும் காகிதக் குப்பைகள்தான் நிறைந்து இருக்கும். ஒரு ஓவியமோ, இலக்கியமோ உருவாகும் வரை அவர்களது உள்ளம் சொல்லொணாத சிக்கல்களுக்கு ஆளாகிவிடும். காரணம், தாங்கள் மேற்கொண்ட பணியைத் தவிர்த்து வேறு எப்பணியிலும் அவர்கள் மனம் செல்லாததுதான். இலக்கியமோ, ஓவியமோ நன்முறையில் பூர்த்தியாகும் வரை அவர்களது பேச்சு, மூச்சு, சிந்தனை அனைத்தும் இவைகள் பற்றியவைகளாகவே இருக்கும். இருவரும் தங்கள் படைப்புகள் உருவாகி நன்முறையில் வெளியாகி வரும்போது மற்றவர்களைவிட அதிக இன்பம் கொள்கின்றனர்.

உலகப்புகழ் வாய்ந்த இலக்கியங்களும் உண்டு. ஒப்புயர்வற்ற ஓவியங்களும் உண்டு. இவைகளை நன்முறையில் உருவாக்கியவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டதுண்டு. உலகப்புகழ் வாய்ந்த இரண்டு ஓவியங்களைப்பற்றி இங்கு கூறுவது மிக நன்ருக இருக்கும். ஒரு சமயம் ஒரு அரசன் ஒரு ஓவியப்போட்டி நடத்தினன். பலரும் பங்குகொண்டனர். ஓவியங்கள் நிறைய வைக்கப்பட்டிருந்தன. எல்லாவற்றையும் பார்த்து வந்த அரசன் ஒரு சிறந்த ஓவியரைப் பார்த்து 'உங்களுடைய ஓவியம் எங்கே'' என்று கேட்க, அந்த ஓவியர் "சாளரத்தின் பக்கத்தில் என்னுடைய ஓவியம் இருக்கிறது பாருங்கள்'' என்று கூற, அரசன் அங்கு சென்று பார்த்தான். அப்பொழுது பறித்த மாதுளங்கனி, தொங்குவதுபோல் ஓவியர் அழகுபடத் தீட்டியிருந்தார். அரசனுக்கு வியப்பு எல்லையைக் கடந்துவிட்டது. அதைவிட எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது என்னவென்ருல், அந்தச் சித்திரத்தில் காணப்பட்ட மாதுளங்கனியை, பறவையினங்கள் உண்மையான மாதுளங்கனியென்று எண்ணிப் பழத்தைக் கொத்துவதாக எண்ணிக்கொண்டு சித்திரப் பலகையைக் கொத்தித் தங்களது அலகுகளை உடைத்துக் கொண்டதுதான்.... பறவையினங்களையும்கவரும் வகையில் அமைந்த அந்த ஒப்புயர்வற்ற ஓவியத்தை யார்தான் போற்ருமல் இருப்பார்கள்? முதற்பரிசு அந்த ஓவியருக்குத்தான் கிடைத்தது என்பதை சொல்லவும் வேண்டுமோ?

இன்னொரு ஓவியம் இதைவிட விசித்திரமானது. இன்னொரு அரசன் ஒரு ஓவியப்போட்டி வைத்தான். அதிலும் பலர் பங்கு கொண்டனர். போட்டி நாளும் வந்தது. அரசன் எல்லோருடைய ஓவியங்களையும் பார்த்துவந்தான். ஒரு ஓவியர் அறையிலே திரைமறைவில் ஓர் அழகிய யுவதி நின்றுகொண்டிருப்பதை அரசனது காந்தக் கண்கள் கண்டுவிட்டன. அரசன் தாமதிப்பானு? அழகிய யுவதியைக்காண வேண்டுமென அவசரத்தில் திரை அருகே சென்ருன். திரையை நீக்க முற்பட்டான். வேகமாக நீக்க விரைந்தோடி நீக்கினுன். ஆனல் திரை நீக்கப்படவில்லை. திரைமறைவில் நின்ற யுவதி மட்டும் அரசனது செய்கையைப் பார்த்தவாறு அசையாமல் நின்றுகொண்டிருந்தாள். அந்தத்திரை அரசனது தலையைத்தான் பலமாகத் தாக்கியது. திரையை விலக்கமுடியவில்லை. எப்படி முடியும்? சிந்தையையும் மாற்றியமைக்கும் வகையிலல்லவா அந்த ஓவியர் தன் திறமைகளையெல்லாம் ஒன்றுசேர்த்துச் சுவரிலே திரைமறைவில் நங்கை நிற்பதுபோல் எழுதியுள்ளார். அரசனது தலையைத் தாக்கி, உள்ளத்தை உவகையில் ஆழ்த்திய அதே ஓவியம்தான் அதைத் தீட்டிய அந்த ஒப்பற்ற ஓவியனுக்கு அரசன் மூலமாக உயர்ந்த பரிசுகளை வாங்கிக்கொடுத்தது. இந்த இரண்டு ஓவியங்களும் உலகப்புகழ் வாய்ந்தவை.

இலக்கியங்களைப் பொறுத்தவரையிலும், ஓவியங்களைப் பொறுத்தவரையிலும் தமிழர்களும், தமிழகமும் என்றுமே பின்வாங்கும் நிலைமையில் இருந்ததில்லை. இருக்கப்போவதும்இல்லை. இன்றும் தமிழகத்தின் பெரும்பாலான ஆலயங்களிலும், கலைக்கூடங்களிலும் ஓவியத்தின் பெருமைகளைக் காணலாம். இரண்

எதிர்பாருங்கள்!

தோழர்:

ப. உ. சண்முகம் எம். எல். ஏ.,

அளிக்கும்

"பொன்னித்தீவில் கன்னித்தெய்வம்"

என்ற தொடர் கதை

விரைவில் இடம்பெறும்.

டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலக்கியங்கள் போற்றப்பட்டுப் பாதுகாத்து வருவதைப் போல் ஓவியங்களும் பாதுகாக்கப்பட்டு வருவதைக் காணலாம். இலக்கியங்களுக்குப் பெருமையூட்டியவர்களும், ஓவியக் கலையின் நுட்பம் அறிந்தவர்களும் தமிழகத்திலே ஏராளமானோர் இருந்திருக்கின்றனர். இன்றும் இருக்கின்றனர்.

இலக்கியங்களில் பலவகை உண்டு. சில இலக்கியங்களை ஆழ்ந்து படித்தால்தான் கருத்துக்களும், கற்பனைச் செறிவும் காணப்படும். அதேபோன்று ஓவியங்களையும் கூர்ந்து கவனித்தால்தான் அவைகளின் நுட்பம் புலப்படும். இலக்கியங்கள்மூலம் மக்களது உள்ளங்களிலே நல்ல சுவைகளைப் புகுத்த முடியும். ஓவியங்கள் மூலமும் மக்களது இதயங்களிலே அந்தச் சுவைகளைப் புகுத்த முடியும். இலக்கியத்திற்கு உள்ள ஆற்றல் ஓவியத்திற்கும் உண்டு. ஓவியர்களுக்கு உள்ள திறமையும், நுண்ணறிவும் இலக்கிய கர்த்தாக்களுக்கும் உண்டு.

ஓர் ஓவியன் இயற்கைக் காட்சிகளையோ, இளமங்கையர்களையோ காணும்போது, அவன் உள்ளம் கண்டவற்றை அப்படியே கற்பனையாகவடித்து, கைகள் அந்தக் காட்சிதன்னை வரையத் தொடங்கிவிடும். இதேபோன்றுதான் இலக்கிய கர்த்தாவும் கார்முகிலையும், கனிமொழியாளையும் கண்ட மாத்திரத்திலேயே கற்பனை காற்றெனப் பறக்கக் கைகள் எழுதத்தொடங்கிவிடும். இருவர்களது நோக்கும் காண்கின்ற பொருள்களைப்பற்றிக் கற்பனை செய்வதிலும், கற்பனை செய்தவற்றை விளக்குவதிலும் தான், எப்பொழுதும் சென்று கொண்டிருக்கும்.

இலக்கியங்களையும், ஓவியங்களையும் விலையால் மதிப்பிட்டுக் கூற முடியாது. இரண்டிற்கும், இவைக்குள்ள முக்கிய அமைப்புகளைப் பொறுத்து எவ்வளவு பொருள்கள் வேண்டுமானாலும் கொடுக்கலாம். அத்தகைய சிறப்புத்தன்மை வாய்ந்தவை.

இதுவரையில் இலக்கியங்களுக்கும், ஓவியங்களுக்கும், இவற்றை உருவாக்குபவர்களுக்கும் உள்ள ஒற்றுமைகளைக் கவனித்தோம். இனிச் சில வேற்றுமைகளையும் காண்போம். இலக்கியங்களைப் படிக்கப் படிக்க மனம் மகிழ்ச்சியடைவதோடல்லாமல், இலக்கியத்தில் காணப்படும் கருத்துக்களை மனம் சிந்தித்துச் செயல்படவும் துவங்கிவிடுகிறது. ஆண்டுகள் பலவானாலும் கருத்துக்கள் இறந்துபோவதில்லை. ஆனால் ஓவியம் அப்படிப்பட்டதல்ல. ஓவியத்தைப் பார்த்தமாத்திரத்தில் மனதில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த மகிழ்ச்சி ஒரு சில நாட்களில் மறைந்தும்போகிறது. குறிப்பாகக் கூறப்போனால் இலக்கியம் நெஞ்சத்திற்கு அருமையான விருந்து. ஓவியம் கண்களுக்கு சிறந்த விருந்து. இலக்கியம் சிந்திக்கச் செய்யும். ஓவியம் சிந்தையைக் குளிரச்செய்யும். இலக்கியம் வாழ்க்கைக்கு வழியை வகுத்துக்கொடுக்கும். ஓவியம் வாழ்க்கையிலே மகிழ்ச்சியைக்கொடுக்கும்.

இலக்கியங்களுக்கும், ஓவியங்களுக்கும் சில வேறுபாடுகள் மிகச் சிறிய அளவில் காணப்பட்டாலும் பெரும்பாலும் ஒற்றுமை நிரம்பியவைதான். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாக இருக்கக்கூடிய இலக்கியங்களையும், ஓவியங்களையும், அவைகளை உருவாக்கியவர்களையும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது அனைவருடைய கடமையுமாகும். புதிதாக இலக்கியங்களையும், ஓவியங்களையும் உருவாக்க முடியாவிட்டாலும் உருவாக்கப்பட்ட அந்த உயரிய படைப்புகளைப் பேணிக் காப்பாற்றவேண்டியது கலையார்வம் படைத்தவர்களின் இலட்சியமாகும். வளர்க இலக்கியமும் ஓவியமும்!

★

வினோதமான கோரிக்கை!

அணு ஆயுத இரகசியத்தை அறிந்து கொள்வதற்காக ரஷ்யாவின் சார்பில் உளவு பார்த்த குற்றத்துக்காக 30 வருட சிறைவாசத்தை அனுபவித்துவரும் தம் கணவரைத் திருமதி மார்ட்டன் சோபெல் சிறைக்குச் சென்று பார்வையிட்ட பின்னர் குழந்தை ஒன்றைப் பெறுவதற்கெனத் தம் கணவரோடு தாம்பத்ய உறவைக் கொள்வதற்கான உரிமையை அதிகாரிகளிடம் தாம் தொடர்ந்து வற்புறுத்தப் போவதாக நிருபரிடம் தெரிவித்தார்.

அவரது ஆரம்ப வேண்டுகோளைச் சிறை நிலைய டைரக்டர் திரு. ஜேம்ஸ் பென்னெட்டோ சென்ற மாதம் நிராகரித்துவிட்டார். ஆனால், 41 வயதினரான திருமதி சோபெல் நிருபரிடம் கூறியதாவது:

“இந்த நேரத்தில் நான் இப்பிரச்னையை எழுப்புவது சரி என நான் நினைக்கிறேன். அவசியமானால் என் வேண்டுகோளை மீண்டு மீண்டும் செய்வேன்.”

ரஷ்யாவின் சார்பில் அணு ஆயுத இரகசியத்தைத் தெரிந்துகொள்ள ஜூலியஸ் மற்றும் எதல்ரோஸென்பர்க்குடன்கூட்டாகச் சதிசெய்ததாக மார்ட்டன் சோபெலுக்கு 1951-ம் வருடம் 30 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றவாளி ஒருவர் சிறைத் தண்டனை காலத்தின் மூன்றில் ஒரு பகுதியைக் கழித்துவிட்டால் அவரைக் காவலுடன் விடுதலை செய்வது வழக்கம். அந்தப்படி பார்க்கப்போனால் மார்ட்டன் சோபெல் 1962ம் வருடத்தில் அந்த உரிமையைப் பெறுவார்.

கைதிகளை உறவினர்கள் சிறைக்குச் சென்று பார்வையிட அனுமதிக்கும் சட்டத்திற்கிணங்க திருமதி சோபெல் சென்ற மாதம் தம் கணவரைப்போய்ப் பார்த்தபோது இரண்டு மணி நேரம் கழித்தார். மீண்டும் தம் கணவரைச் சிறையில் கண்டு இரண்டு மணிநேரம் பேசினார்.

சோபெல் தண்டிக்கப்பட்டதிலிருந்து அவரை விடுதலை செய்வதற்கான முயற்சியில் டாக்டர் வேலை பார்க்கும் திருமதி சோபெல் தம் பெரும்பகுதி நேரத்தைச்செலவழித்து வருகிறார்.

சோபெல் தம்பதிகளுக்கு மார்க் என்ற 10 வயது புதல்வர் ஒருவர் இருக்கிறார். திருமதி சோபெலுக்கு முதல் திருமணத்தின் மூலம் சிட்னி என்ற ஒரு புதல்வியும் இருக்கிறாள்.

தலைநகர் விழா

"கண்டு வந்தோன்"

வெள்ளம்போல் தமிழர் கூட்டம் —அவர்தம் உள்ளத்தே விடுதலை வேட்கை—தெள்ளு தமிழ்நாட்டின் திராவிடத்தின், நலனில் நாட்டம்—கழகம் விடுக்கின்ற கட்டளை எது, தொடுக்கின்ற போராட்டம் என்ன, இடுகின்ற பணி யாது, கேட்க விருக்கின்ற காணிக்கை எவ்வளவு, இவையும் இன்னபிற கேள்வி பலவும் உள்ளத்தே எழுப்பியவராய்—எப்போது போராட்டம், என்று கிட்டும் விழுப்புண்கள் பெறுகின்ற மகத்தான வாய்ப்பு, என்றஆர்வம் கொந்தளிக்கும் உள்ளத்தினராய்க் கூடியிருந்தனர்—ஆயிரக்கணக்கில் அல்ல அல்ல, இலட்சக்கணக்கில்!

தமிழகத்தின் தலைநகர், அந்த இரண்டு நாட்களிலும் பூண்டிருந்த விழாக்கோலம், மாற்றுரை மருள வைத்திருக்கும் — நம்மனோர் உள்ளமோ, மெத்தக் குளிர்ந்தது—நமது இலட்சியத்தை அடையும் நாள் இன்னும் வெகு தொலைவில் இல்லை என்று ஆர்வத்தோடு, ஆனால் சிறிதும் பிசகில்லாத வகையில், கணக்கிட முடிந்தது!

அக்டோபர் 16ல் நடைபெற்ற ஊர்வலம் — ஏறக்குறைய ஆறு மைல்களுக்குமேல்!

எனினும் பல்லாயிரக் கணக்கானோர், கொடியேந்திய கரங்களோடு, ஒலிகள் எழுப்பிய வண்ணம், சிறிதும் சலியாமல், கழகம் இடுகின்ற கட்டளை எதுவாயினும் சிரமேற்றுங்கி, சிரமமதைப் பாராது நடத்துகின்ற நேர்மையாளர், உள்ள உரத்தினைப் பெற்றவர் என்பது எவருக்கும் புரிந்திடும் வகையில், சிறப்பானதோர்ஊர்வலத்தை நடத்திக்காட்டி—இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்று, கேட்காமல் கேட்டிருக்கின்றனர்.

மாநாட்டின் திறப்பாளர் இராம. **அரங்கண்ணலும்,** தலைவர் டி. கே. சீனி**வாசன்** அவர்களும், அலங்கரிக்கப்பட்ட காரில், ஆரவாரங்களுக்கிடையே, ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர் — கண்கொள்ளாக் காட்சி அது!

மறுநாள்! தி. மு. கழகத்திற்கு, சென்னை மாவட்டத்தின் காணிக்கையினை — அது பெற்றிருக்கிற தியாகத் தழும்புகளை—சிந்தியிருக்கிற குருதி வெள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் அமைந்திருந்தது, வரவேற்புக் குழுத்தலைவர் கோ. செங்குட்டுவனின் வரவேற்புரை.

கொட்டும் மழையில் — குழுமிய உள்ளத்தோடு — ஆனால் கொள்கையில் உறுதியோடு — உள்ளத்தில் தளராத நம்பிக்கையோடு பத்து ஆண்டுகட்கு முன்னாலே துவக்கப்பட்ட கழகம், இப்போது எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதனையும், இந்த வளர்ச்சியினைப் பெற நாம் பட்டிருக்கிற பாடுகள் எவ்வளவு, தாங்கியிருக்கிற தொல்லைகள் எத்திறத்தன, எவ்வெவ் வகையின என்பதனையும் விளக்கி—மிக விரைவில், நிதியமைச்சர் சுப்ரமணியம் அன்றோர் நாள் சட்டமன்றத்தில், தவறு தலாகவோ அல்லது வேண்டுமென்றோ கூறினாரே பத்து ஆண்டுகள் என்று, அந்தப் பத்து ஆண்டுகட்குள் நாம் விடுதலை பெற்றாகவேண்டும் — அதற்குரிய காணிக்கை எதுவானாலும், தேவையான தியாகம் எந்த அளவு பெரியதானாலும், உவகை பூத்த உள்ளத்தோடு, தந்து தழும்புபெற, அந்தத் தழும்பினைத் தடவிப் பார்த்து மகிழ்ந்திட உயிர் இருக்குமெனினும் இல்லையெனினும் கவலைப்படாத உள்ளத்தினர், விடுதலை வேட்கையினர் நாம், அதுவும் பல்லாயிரக் கணக்கில்—என்று ஆரவாரத்திற்கிடையே முழங்கினார், மாநாட்டுத் திறப்பாளர் **அரங்கண்ணல்.**

மாற்றார் தம் தூற்றல் பாணங்கள் பலவற்றிற்கு, மறுக்கமுடியாத வகையில் பதிலளித்து, விடுதலை இயக்கமெதனையும் ஏசல்களோ, இச்சக மொழியோ, ஆட்சிப்பீடமேறியோரின் அடக்குமுறைகளோ, ஆணவப் பேச்சுக்களோ, நசுக்கவோ, ஒடுக்கவோ முடியாதென்பதனை விளக்கி — தி. மு. க. காண்கின்ற வருங்கால திராவிட நாட்டை, விடுதலை பெற்ற தமிழகத்தை, நல்ல முறையிலே படம் பிடித்துக் காட்டினார், மாநாட்டுத் தலைவர் டி. கே. சீனிவாசன்.

திராவிடத்தின் வளங்கள்,
வடக்கும் தெற்கும்,
தி. மு. க. வளர்ச்சி.
சட்ட மன்றத்தில் தி. மு. க.
மாநகராட்சியில் தி. மு. க.
விடுதலை முழக்கம்.
கலைஞர்களும் தி. மு. க.வும்.
திராவிடர் நிலை
கடல் கடந்த தமிழர் வாழ்வு.

—இவையும், இன்னபிற பொருள்கள்பற்றியும், கழக முன்னணி வீரர்களும் கலைஞர்களும், சனி, ஞாயிறு இரண்டு நாட்களிலும் ஆற்றிய சொற்பொழிவுகள், தி. மு. க. வின் கொள்கை எவ்வளவு ஆணித்திறமானது, எந்த அளவு திராவிடர்தம் வாழ்வுக்கு இன்றியமையாதது என்பது, கருத்துக் குருடர் தவிர மற்றெவருக்கும் புரிந்திடும் வகையிலே அமைந்திருந்தது!

தி. மு. க. நடத்திய எந்தமாநாட்டினைப் பற்றியும் ஓரிரண்டு வரிகள் கூட எழுத மனமில்லாத "இந்து" "மெயில்" இதழ்கள்கூட இந்த மாநாட்டைப்பற்றி, மனமுவந்து, ஓரளவு எழுதியிருப்பது, உண்மையிலேயேமகிழ்ச்சிதரத்தக்கது. என்பது மட்டுமல்ல — அவர்தம் உள்ளம் திறந்தமைக்கு மாநாட்டிலே தரப்பட்ட கருத்துரைகளின் ஆழம்தான் காரணமோ அன்றி, அங்கே கூடியிருந்த மக்கள்வெள்ளம்தான்காரணமோ, நாமறியோம்.

இந்த அளவுக்கேனும் செய்தி வெளியிட்ட அந்த இதழ்களுக்கு, நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது, தி. மு. கழகம்.

இந்தப் பெருந்தன்மை, இனி என்றும் நிலைக்கவேண்டுமென எதிர்பார்க்கிறோம், — அப்போதுதான், தென்னக மக்களின் உள்ளக் கிடக்கையை, காலவெள்ளத்தின் போக்கினை, மற்றவர்கள் அறிந்து கொள்ள முடியும் என்பதுமட்டுமல்ல, 'பத்திரிகா தர்மம்' என்று ஒன்று இருக்கிறதே, அது காக்கப்படும், நிலைநாட்டப்படும் என்பதற்காக!

சுருங்கச் சொல்லின், சென்னையில் நடைபெற்ற மாவட்ட மாநாடு, தி. மு. கழகத்தின் பாதையில் மற்றோர் மைல்கல் — மறக்கமுடியாத கட்டம் — ஏனோ தானோ என்று கண்மூடி, கருத்தினை மறைத்திருந்தோர் அனைவருக்கும் திராவிடர்தம் விடுதலை வேட்கையினை எடுத்துரைக்கின்ற வகையில் அமைந்த ஒரு சிறப்பானதோர் நிகழ்ச்சி.

அந்த நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திட அல்லும் பகலும் அயராது உழைத்த வரவேற்புக் குழுவினருக்கும், மற்றையோருக்கும் சென்னை நகரப்பொதுமக்களுக்கும் வாழ்த்துக்களும் — பாராட்டுதல்களும் உரியவாகுக. ❀

"உற்றது இது— மற்றது புரிந்துகொள்!"

"என் மகளே, எழுந்திரு, இனிய பாற்சோறு, ஈக்களால் சேகரித்த, கொம்புத்தேன் கலந்த சருக்கரைப் பொங்கல், நற்தங்க நிறமொத்த பருப்புச்சோறு, இளம்சூல் மாந்தரும் விரும்பி ஏற்கும் எலுமிச்சை நீர்வார்த்த சிறுமணிச்சோறு, துரங்கும் குதித்தோடிக் குரும்பைகளை உதிர்த்துவிடும், அதன் பிடியில் தப்பிய முற்றி விளைந்த அத்தென்னங்காய்ப் பாலில் பிசைந்த கிச்சடிச்சோறு, இத்தனையும் உண்டு. எழுந்துவா, நறுநெய் வார்த்து நலமாக உண்ணலாம், பாகற்காய்ப்பச்சடி, விதையெடுத்த வேர்ப்பலாவின் சுளை, வெட்டிப் போட்ட கட்டு மாம்பழத் துண்டு, உரித்த தேன் கதலிப்பழம். தேனிலே ஊறவைத்த உரிக்காத திராட்சைப் பழம், எதுவேண்டும் என் கண்ணே எழுந்து வா!"

என வருந்தியழைத்தாள்! வாஞ்சை மிகுநற்றாய். பேசினால் எழுந்திடுவாள், பிடிசோறு உண்டிடுவாள், என்றித்தனையும் எடுத்துரைத்தாள்! அத்தனையும் பயனற்றன, பிறகு அருகில் சென்று பார்த்தாள்.

சின்னஞ்சிறு மின்மினிபோல, கண்சிமிட்டி விண்மீன்கள் விண்ணிலே பளிச்சிடுகின்றன. இத்தனைக்கும் பொலிவு தருவது போல, வட்டநிலா பட்டொளி வீசிப் பவனி வருகிறது.

இதையொத்த பலவித மாந்தர் மறைவின்றி, விலைகூறும், மலர் போன்று பொலிவு காட்டுவர். ஆனால், இவளது தோற்றம் விண்மீன்களுக்கிடையே வெண்ணிலவு போன்றதுதான்.

அந்த அழகுப் பெட்டகத்தை கட்டழகன் கண்டுவிட்டால், விட்டுவிட்டா செல்வான்? தொட்டிழுத்துச் சென்றுவிட்டான், அவளையல்ல! அவளது உள்ளத்தை. எனவேதான், உணவருந்த மனமில்லை, உறங்குவதற்கும் நினைவில்லை, கள்ளுண்ட கடுவன்போல உள்ளம் அற்றவளாய் நிலைகுலையக்கிடந்தாள். இந்நிலையைச்செல்லமாய் வளர்த்த அந்த நல்ல தாய் கண்டாள், வெயில் கண்ட வெண்ணெய்போல் உருகினாள், என்ன செய்வதென்றறியாது தோழியின் வரவை, எதிர்நோக்கி நின்றாள்! வந்தாள் தோழி.

திங்களைத் தோற்கடிக்கும் செங்கரும்பையொத்த என்னருமை மகளின் தோழியே! உன் தலைவி, ஊண் உறக்கத்தை வெறுக்கக் காரணமென்ன,! என வினவினாள்.

முல்லை மொட்டைத் தோற்கடிக்கும் முத்துப் பற்களையும், கொல்லையில் வேட்டையாடும் வேடுவன் கை வில் போன்ற புருவத்தையும், கொவ்வைக் கனியொத்த செவ்விதழ் உதட்டையும், கும்பத்தின் முனைபோன்ற தனத்தையும் உடைய என் தலைவியை ஈன்ற தாயே! நீவிர் நீடு வாழ்க! நின் மகள் உள்ளத்தை நானெப்படி அறிவேன்? உடம்புக்கு ஒருவேளை குளிர் காய்ச்சல் வந்ததுவோ! அதுவுமில்லையானால்! அப்படியாகத்தானிருக்கவேண்டும்!!

எம். வி. துரை

"ஓர்நாள் பல தோழிகள் புடைசூழ, சில தோழிகள் சிரிப்பூட்ட, சந்தனக் குழம்பெடுத்து அவள் அங்கமெல்லாம் பூசி. அங்கிகளை அணிவித்து, வேங்கை மலர் கொய்துவரச் சாரல்மலை சென்றோம். அங்கே! கள்ளி மலர் மெல்லச் சிரிக்கும், கற்றாழைப்பூ, கண் விழித்துப் பார்ப்பதுபோல் சிரிக்கும், சப்பாத்திப் பூ கல கலவென வாய்விட்டுச் சிரிக்கும்.

எந்த ஆடவனும், ஏறெடுத்துப் பாராவிட்டாலும், வாடிக்கையாகச் சிரிப்பை, வரவழைத்து ஊமைச் சிரிப்பையொருத்தியும், புன் சிரிப்பையொருத்தியும், பல்லெல்லாம் தெரிய ஒருத்தியும்-சிரிப்பது போல் இருந்தது அப்பூக்களின் காட்சி.

நல்ல ஆடவர்கள் இவர்களை ஒதுக்குவதுபோல நாங்களும் அம்மலர்களை ஒதுக்கிச்சென்றோம். கொன்றைமலர் குலை தாழ்ந்து நின்றது, வேண்டாமென்று, வேறு பக்கம் சென்றோம், புன்னை மலர் கண்ணடித்து அழைத்தது. வண்ணமலர் நீயல்ல நாணிப் போவென நடந்தோம், உண்ணிப்பூ பண்ணிவைத்த தோடுபோல பளிச்சிட்டு நின்றது, பார்த்தும் பாராமலே நடந்தோம், காட்டுமுல்லை கூட்டுச்சேர்த்து வாட்டமுற்று நின்றது. எங்களுக்கு ஆகாதவள்நீ, இனியொருத்தியைப் பார் எனச் சென்றோம்.

குயிலிருந்து இசைபாடும் குருந்தை மரம் நிறைய உண்டு, கார்கண்டு நடைபயிலும் கான மயிலும் உண்டு, துள்ளிடும் மீன்கள் நிறைந்த வற்றாத நீர்ச்சுனையும் உண்டு அங்கே. சிற்றானை உறங்குவதுபோல் கருமை நிறக் கற்பாறையொன்றிருந்தது. கற்றாழைச்சாறு பூசப்பட்டு நட்டுவைத்த கம்பம்போல் கால்வைத்தால் சறுக்கிவிடும் அக்கற்பாறை.

கட்டித் தயிர் தின்ன, எட்டாத உறிகண்டு சட்டிகளை அடுக்கி வைத்துத் தட்டுத் தடுமாறி எட்

டிப் பிடிப்பதுபோல், குண்டுக்கல் கொண்டுவந்து கோபுரம்போல் அடுக்கிவைத்து இமயத்தின் தலை கண்டவன்போல இறுமாப்போடு ஏறிவிட்டோம்.

எட்டாத உயரத்தில் வேங்கை மலர் பட்டுப்போல் மின்னியது. நாடிவந்த மலரல்லவா அது! அண்ணாந்து பார்த்தோம்; ஔவைக்குக் கனிப்போட்ட ஆயர்குலச் சிறுவன்போல இங்கொருவன் இல்லையே, என எண்ணினோம், அத்தோடு விட்டோமா? திராட்சைப் பழம் தின்ன நரி தாவிக் குதித்ததுபோலத் தாவித் தாவிப் பார்த்தோம்—எட்டவில்லை அந்த மலர்.

"புலி, புலி என்றிரைந்தால் தாழ்ந்து வரும் வேங்கை மலர் என்றாள் ஒருத்தி.

போடி பத்தாம்பசலிப் பாட்டிக் கால கதையை நீட்டுகிறாயா இப்பொழுது என்றாள் மற்றொருத்தி.

போடி வாயாடி, உனக்கென்ன தெரியும்! வாவென்றால் நல்ல தங்காளுக்கு விளைந்துவரவில்லையா கனியொடு மாங்கிளை, என்றாள் இன்னொருத்தி.

ஆமாண்டி, அதனால்தான் அத்தகைய உத்தமியிருந்த நாட்டிலே பஞ்சம் கொஞ்சி விளையாட, பாலகர்களும் பசியால் வாட, வேறு நாடு தேடிவந்து குழந்தைகள் எழுவரையும் மடித்து, தானும் வீழ்ந்து பட்டாள் அவள் 'பெருமை' உரைப்பதற்கு கடுகளவு நாணமுண்டா என்றாள் மற்றொருத்தி.

இத்தனையும் கேட்டுவந்த என் தலைவி, ஏசலும் பூசலும் இப்பொழுது பயன்படா. மெய்யும் பொய்யும் ஐயமற அறியலாம்; ஒருவர்க்கொருவர் சினப்பது வேண்டா. புலி புலி எனக்கூவி நின்றாள்.

கருநாவல் பழந்தின்னக் கரடி மரமேறிக் கிளை தாவும்; கொடிப்புலியும் அக்கிளையிலே பழந்தின்னத் தொடர்ந்து செல்லும்,—இரண்டும் சேர்ந்துவிட்டால்! மருண்டு போர்மூண்டு அம்மலையே அதிர்ந்துவிடும் கூச்சல்!

சருகுமான் பூனை போலத் தரை படர்ந்த அருகம்புல்லை, விரும்பித் தின்னும் திருட்டு நரி, அம்மானைப் பிடிக்க ஓட்டிக்கொண்டு ஒண்டியொண்டிச் செல்லும், தனக்கு நிகரில்லையெனத் தலைக்கிறுக்குக் கொண்டதுவாய் சிறுத்தைப் புலி உலவும்! உன் பருத்த தசைகளையும் பிய்த்து உண்டிடுவோம், எனச் செந்நாய்க் கூட்டங்களின் பட்டாளமும் பின் தொடரும்.

'அம்மலைக்காட்டிலே! சிறுத்தையைக் கொல்லவந்தானே! சீறும் கொடிப்புலியைக் கொல்லவந்தானே! குறுமுயல் கொன்று நறுசுவைக் கறி சமைத்துண்ண நாட்டங்கொண்டு வந்தானே! தெரியவில்லை, எம் எதிரே சிறு கல்பட்டால் பல கல், தொலை. அக்கல் சிதறியோடத்தக்க காலிலே செருப்பு. புலிநகம்தாங்கிய (பொலிவுள்ள) மார்பு, கண்டோர் மருள, கன்னியர் காமுற, கருவண்டும் நாணத்தக்க விழிகள், நடைபயிலும் காலொடு, தடைசெய்யும் உள்ளத்தொடும், கையிலே கணை தொடுத்த வில்லொடு, என்ன! எங்கே! புலி, என வினவினான்.

ஆள்கண்டு ஆமை தலையை உள் இழப்பதுபோலவும், அரவம்கண்டு சுண்டெலி மறைவதுபோலவும், கருடன் கண்டு கருநாகம் பதுங்குவதுபோலவும், ஓடும் மேகங்களின் உள் செல்லும் வண்ணமதிபோலவும், பின்னால் மறைந்து மறைந்து நின்றாள், நின் மகள்.

குற்றம் செய்துவிட்டு மற்றவர் பின் ஒளியும் நிலையைக்கண்ட அவன், நீரையொத்த உள்ளம், நெருப்பையொத்த மேனி, கருமை தடவிய உடை நெய்வோன் கைநூல்போன்ற கூந்தல், ஓவியன் அகத்தே உருவாகும் சிலையொத்த பெண்பாவாய், உன்வாயும் பொய் கூறியதா! நீ பொய் கூறினால் மற்றவர்களைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? என்று கூறிநடந்தான்.

படைதனில் வெற்றிபெற்ற வீரன்போலும், பாய்ச்சலில் தோற்கடித்த காளைபோலும், பேடைக் கண்டு நடைபயிலும் சேவல் போலும், காடைகண்டு களிப்புறும் கருடன்போலும், கடமை செய்ய விரைந்து செல்லும் தியாகி போலும் நடந்தான்! நின்மகள் பார்த்தாள் சென்ற திசை நோக்கி. அவன், மறையும்வரை பார்த்துக் கொண்டே இருந்தாள். பின், என் பக்கம் திரும்பி.

'வீரனும் இவனே! வெற்றிப் புன்னகையாளனும் இவனே! மங்கைக்குரிய மணாளனும் இவனே! வாழ்க்கையமைக்க வல்லவனும் இவனே! வறுமையறிந்து பெருமை கொள்ளா அருமைப் புகழ் தேடும் ஆற்றல் மிக்கவனும் இவனே?' என்றாள். நடந்தது அவ்வளவே வேறொள்ளளவும் தவறில்லை — உற்றது சொன்னேன், மற்றது புரிந்துக்கொள்க தாயே! அதற்குமேல் சொல்ல யானும் வல்லளோ என்று உரைத்தாள்"

இத்தகு கருத்தை எழிலுற எடுத்துக்காட்டி இன்பமூட்டிக் கொண்டிருக்கும் இன் தமிழ்ச் செய்யுளை ஈண்டு காணுங்கள்:—

"அன்றய் வாழி, வேண்டு அன்னை நின் மகள்
பாலும் உண்ணாள் பழங்கள் கொண்டு
நனி பசந்தனள் என வினவுதி பசந்தனள்
யானும் தெற்றென உணரேன் மேனாள்.
மலி பூஞ்சாரலின் தோழிமாரோடு
ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழிப்
புலி புலி என்னும் பூசல் தோன்றப்
ஒண் செங்கழு நீர் கண்போல் ஆயிதழ்
ஊசிபோகிய சூழ் செய் மாலையன்
பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயம் மண்டுஆகம் செஞ்சாந்து நீவி
வரி புனை வில்லை ஒருகணை தெரிந்து கொண்டு
யாதோ மாற்றம் மாதிரம் படர் என
வினவி நிற்றந்தோனே அவற்கண்டு
எம்முள் எம்முள் மறைபு ஒடுங்கி
நாணி நின்றெனம் ஆகப் பேணி
ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்
மையீர் ஓதி மடவீர் நும் வாய்ப்
பொய்யும் உளவோ என்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேரன் எதிர் மறிந்து
நின் மகள் உண்கண் பண்மாண் நோக்கி
சென்றோன்மன்ற அக்குன்று கிழவோனே
பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்து
அவன் மறைந்தே எம் நோக்கி இவன்
மகனே தோழி என்றனள்! அதனளவு
உண்டு கொல் மதி வல்லோர்க்கே-"

[அகம், 48]

★

உண்மையான மனைவிக்குத் தன்னுடைய அழகைப் பார்க்கக் கூடிய கண்ணாடி தன்னுடைய கணவனுடைய கண்களேயாகும்.

கண்ணீர்—பலவகை!

"டாக்டர் சதானந்தம் விடுங்களா இது?" — "டாக்டர் தர்மதுரை இருக்காரா சார்... ஓஹோ ...எப்போ வருவாருங்க?" —"டாக்டர் கனகசுந்தரமா சார் பேசறது? ...இப்போ இங்கே அவசரமாக வர முடியுமா சார்?"—இப்படிக் கண்ணாயிர முதலியாரின் வீட்டிலிருந்து, ஒவ்வொரு டாக்டர் வீட்டிற்குமாக, 'டெலிபோன் கால்'கள் பறந்த வண்ணமிருந்தன!

கண்ணாயிர முதலியார் கொளு கொளு என்றுதான் வீற்றிருந்தார் —அவருக்கு ஒன்றும் அபாயமில்லை. அவருடைய மனைவியோ, முன்னைவிடப் பருமனாகியிருப்பதாக, சுற்றுப்புறத்திலிருப்பவர்களெல்லாம்சொல்லுகிறார்கள். அவர்களுடைய அருமந்த மகள்—கோமளம்—தளிர்மேனி வாடாமல், தளதளப்புக் குறையாமல், துக்கத்தின் சாயலையே கண்டறியாமல் செவ்வனே வளர்ந்திருந்தாள் — விழியிரண்டு போதுமோ அவளைக் காண, என்று, அவளைக் காணுகின்ற வாய்ப்பினை மட்டுமே பெற்ற வாலிபர்களெல்லாம், பெருமூச்சு விடுகின்ற வகையில்!

கண்ணாயிர முதலியாரின் குடும்பமே அவ்வளவுதான் — மூன்று பேர் — அனைவருமே நன்றாகத்தான் இருந்தார்கள், நோய் நொடியின்றி!

பின்னர் டாக்டர்களை அழைத்திடக் காரணமென்ன? யாருக்கு உடல் நலமில்லை? 'ஜிம்மி'க்கு — அவர்களால், ஆசையோடு வளர்க்கப்படுகின்ற நாய்க்கு!

மேல்நாட்டு நாயாம் அது—விலை அதிகமாம்—அந்த 'ரக'மே இங்கே கிடைப்பது அரிதாம்! அப்படிப் பட்ட நாய்க்கு திடீரென்று கண்களிலிருந்து நீர் வடிந்தவண்ணமிருந்ததாம்!

ஏன், எதனால், என்று யாருக்குமே புரியவில்லை!

எனவே, எந்த டாக்டர் கிடைப்பார் என்று தேடியவண்ணமிருந்தார்கள்.

கடைசியிலே ஒரு டாக்டர் வந்தார்! அவரிடம், நிலைமையை

> **ஆனந்தக் கண்ணீர் — அன்புப் பிணைப்பைக் காட்டுகின்ற கண்ணீர்— சோகத்தைக் வெளிப்படுத்தும் கண்ணீர் — இப்படிப் பலவகை! அந்த வகைகளைக் காணலாம், இந்தக் கதையில்.**

விளக்கி, அழமாட்டாதகுறையாகச் சொன்னார், கண்ணாயிரம்!

டாக்டருக்கோ, ஒருபுறம் சிரிப்பு —மறுபுறம் பச்சாத்தாப உணர்வு! பாவம், இந்த நாய்மீது எவ்வளவு ஆசை வைத்திருக்கிறார் இந்தப் பெரியவர், என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டார்!

நீண்டநேரப் பரிசோதனைக்குப் பிறகு, கடைசியிலே ஒரு இஞ்செக்ஷன்!

M. S. வெங்கடாசலம், M. A.

பின்னர், டாக்டர் கேட்டார், "சார், இந்த நாய், தனியாகத்தானே இருக்கிறது?"

"என்ன அப்படிச் சொல்லிட்டீங்க! அது எப்போதும் என் கூடவேதானுங்க இருக்கும்—தனியாகவே அதை விடறதில்லைங்களே!"

டாக்டர் சிரிப்பை அடக்கிக் கொண்டு, "நான் அதைக் கேட்கவிங்க! அதற்கு ஒன்றும் ஜோடி இல்லையா என்று கேட்டேன்."

முகத்தில் அசடு வழிய, தலையைச் சொரிந்துகொண்டே, "இல்லைங்க" என்று பதில் சொன்னார் முதலியார்!

"எப்படியாவது, ஒரு ஜோடி பார்த்து விட்டுடுங்க சார்; அப்போதுதான், இந்த நோய் குணமாகும்" என்று சொல்லிவிட்டுச் சென்றார் டாக்டர்!

இஞ்செக்ஷன் போட்டதற்கான 'பில்'லையும் கொடுத்தார்—அதில் ரூ. 15 என்று போட்டிருந்தது!

கண்ணாயிர முதலியாரின் மூளை விறுவிறுப்பாக வேலை செய்தது. அந்த ஜாதி நாய்—ஜிம்மிக்கு ஜோடி—எங்கே கிடைக்கும் என்ற ஆராய்ச்சியிலே ஈடுபட்டார்.

"டிரைவர்! காரை எடு!" என்று புறப்பட்டு விட்டார்—வழக்கமாகப் போட்டுக் கொள்ளும் ஜரிகை அங்கவஸ்திரத்தைகூட எடுத்துக் கொள்ளாமல்! அவ்வளவு அவசரம் அவருக்கு!

காரிலே எங்கெங்கோ சுற்றி முடிவில், ஒரு சேட்டிடம் அந்த நாய்க்கு ஏற்ற ஜோடி இருப்பதாகக் கேள்விப்பட்டு, அவனிடம் சென்றார்!

அந்தச் சேட்டின், காலைப் பிடித்து, கையைப் பிடித்துக் கெஞ்சி, ரூ. 700/ கொடுத்து, அந்த

நாயைப் பெற்றுவந்தார். அளவு கடந்த மகிழ்ச்சி அவருக்கு! ஜிம்மியை எப்படியோ காப்பாற்றிவிட்டோம் என்ற பெருமிதம்!

* * *

"ஜிம்மிக்குக் கண்ணில் நீர் வந்த வகைக்காகச் செலவு ரூ. 790" என்று கணக்கு எழுதி வைத்தார், கணக்கப்பிள்ளை கஜேந்திரன்!

அவருக்கும் கண்ணில் நீர் துளிர்த்தது, அந்தக் கணக்கை எழுதும்போது! ஆனால் நாயின் கண்ணில் நீர் வடிந்ததற்கும், இவர் கண்ணில் நீர் துளிர்த்ததற்கும் சம்பந்தமில்லை--காரணங்கள் வெவ்வேறு!

"நாயின் கண்ணீரைத் துடைக்க ரூ. 790 செலவு—நம் கண்ணீரைத் துடைக்க...? "—இது அவருள்ளத்திலே எழுந்த கேள்வி!

தன் ஒரே மகன்—B. A. படித்துக் கொண்டிருப்பவன் — திடீரென்று நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாகி விட்டதால், முதல் நாள்தான் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்தார், அவர்!

அங்கே அழைத்துச் செல்ல, "டாக்சி" செலவுக்கும் ஆஸ்பத்திரியிலே இருக்கிற "தெய்வ"ங்களின் "ஆராதனை"க்கும் அவர் பட்டபாடு, அப்பப்ப! சொல்லி முடியாது!

நாய்க்குத் தண்ணீர்போல் பணம் செலவாவதையும், தன் ஒரே மகனுக்கு ஆபத்து என்று தெரிந்தும், அந்தச் சீமான் மனமிளக மறுப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தார்—துக்கம் தொண்டையை அடைத்தது!

ஆனாலும் என்ன செய்வார், பாவம்! கணக்கப்பிள்ளை கணக்கப்பிள்ளை தான்—முதலாளி முதலாளி தான்!

* * *

"ஏங்க, இது என்ன இது! கோமளத்துக்குப் பதினேழாவது பிறந்தநாள்விழா என்று பத்திரிகையிலே போட்டிருக்கிங்களே!"

"ஆமாம்! பின்னே என்ன செய்யச் சொல்றே? 25வது பிறந்ததின விழா என்று தெரியப்படுத்திட்டா, அப்புறம் எந்தப் பயல் கல்யாணம் பண்ணிக்குவான், உன் பெண்ணே?"

"அது சரி! அந்த வக்கணைக்குக் குறைச்சலில்லே! அவளுக்கு நல்ல மாப்பிள்ளையா பார்த்து, சீக்கிரமா ஒரு கல்யாணத்தை முடிச்சிடுங்கன்னு, அதைச்செய்யமாட்டேங்கிறீங்க!"

"நானா மாட்டேங்கிறேன்! அவ தான், எந்த வரன் வந்தாலும், வேண்டாம் வேண்டாம்ன்னு தட்டிக் கழிச்சிக்கிட்டே வருகிறா!"

"அதுக்கு என்னுங்க செய்யறது! அவளுக்குப் பிடிச்ச மாப்பிள்ளையா தான் நாம் பார்த்தாகவேண்டும்!"

அந்தச்சமயத்தில் கோமளம் வந்தாள், புதிதாக வாங்கப்பட்ட நாயைத் தூக்கிக்கொண்டு!

"அப்பா, இந்த நாய் ரொம்ப நல்லா இருக்கு, அப்பா! நம்ம ஜிம்மிக்கு ஏத்த ஜோடிதான்!"

"அதுசரி, உங்க அப்பா...நாய்க்கு ஜோடி பார்க்கிறதிலே காட்டுற அக்கறை..." என்று இழுக்கும் போதே, "போதும் போதும் நிறுத்து" என்ற வாசகங்கள் பொங்கி வந்தன, முதலியாரின் வாயிலிருந்து!

"நாய்க்கு" என்ற வார்த்தைக்கு அந்த அம்மையார் கொடுத்த அழுத்தம், அந்த அளவு ஆத்திரத்தை உண்டாக்கிவிட்டது அவருக்கு!

பதில் பேசாமல் சென்றுவிட்டார்கள், முதலியாரின் சகதர்மிணி!

"கோமளம், இந்தாம்மா, உன்னுடைய பிறந்த நாள் விழாவுக்கு 'இன்விடேஷன்!' உனக்குத்தெரிந்த பிரென்ட்ஸ்-க்கெல்லாம் கொடு", என்று ஒரு கத்தை அழைப்பிதழ்களை நீட்டினார், தனது அருமந்த மகளிடம்!

கோமளம், அழைப்பிதழ் ஒன்றைப் படித்துவிட்டு, சிணுங்கிக் கொண்டே கேட்டாள் "என்னப்பா இது! 17-வது பிறந்த நாள் விழா என்று போட்டிருக்கு!"

"ஏம்மா! வயசைக் குறைச்சிக் கொடுத்தாதான் நல்லது அம்மா! இன்னும் உலகம் தெரியாத பொண்ணா இருக்கியே!"

"இல்லேப்பா! என் பிரென்ட்ஸ்-ங்ககிட்டேயெல்லாம் எனக்கு இன்னும் 15 வயசே பூர்த்தியாக லேன்னு சொல்லிக்கிட்டு இருக்கேன்..."

கண்ணாயிரம், புன்முறுவல் உதிர்த்தபடி, மகளின் கன்னத்தைக் கிள்ளினார், செல்லமாக—அவளுடைய சாமர்த்தியத்தை மெச்சுகின்ற வகையில்.

அவரது கண்களில் நீர் துளிர்த்தது — களிப்புக்கடலில் அவர் மிதக்கிறார் என்பதைக் காட்டுவதைப்போல்!

அதற்குள் யாரோ, அந்நியர் திடீரென்று வரவே, பேச்சு அப்படியே தடைபட்டது — கோமளம் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாள்.

* * *

நவயுக நாரீமணிகள்—நாகரிகத்தின் 'பிம்பங்கள்' எல்லைக்கோடுகள், பலர் வந்திருந்தனர், கோமளவல்லியின் பிறந்த நாள் விழாவிற்கு!

வீடே அல்லோலகல்லோலப்பட்டது அன்று! ஒரே பாட்டும் கூத்தும்தான்! கலகலவென்ற சிரிப்பொலிகள் — ஆர்வமிகுதியால் எழுப்பப்படுகின்ற கைதட்டல்கள், அப்போது கிளம்புகிற வளையொலி —பாட்டி கட்டியிருக்கிற நீலப் புடவை முதல், பக்கத்து வீட்டு வாலிபனின் பருமன்வரை ஆராய்ச்சிக் கருத்துக்கள் — இத்தனையும் எழுந்தன அன்று!

ஆனால்......கோமளம்! எந்தக் கோலாகலத்திலும், மனப்பூர்வமாகப் பங்குபெறவில்லை!

பெற்றோருக்கு மன வருத்தம் தான்! மகளின் வேதனை என்ன என்று அறியத்துடித்தனர்-துளைத்தெடுத்தனர், கேள்விக் கணைகள் தொடுத்து!

"ஒன்றுமில்லை" என்ற ஒரே பதில், காயகல்ப லேகியம்போல், வந்துகொண்டிருந்தது, அவளுடைய வாயிலிருந்து!

விழா முடிந்து விருந்தினர்களெல்லோரும், விடைபெற்றுச் சென்றனர். கோமளவல்லியோ தன் படுக்கை அறையைத் 'தஞ்சம்' புகுந்தாள்!

மகளுக்கு என்ன குறையோ என்று தந்தைக்கு வருத்தம். ஒரு சமயம், தன்னுடைய மனைவி சொன்னதுதான் சரியோ, இன்னமும் மணாளன் கிடைக்காத ஏக்கத்தால்தான் அவ்வாறு மனம் வெதும்புகிறாளோ, இவ்வாறு ஓடின, அவரது எண்ண அலைகள்!

தாய்க்கும் வருத்தம்தான்—ஆனால் வேறுவிதத்தில்! அன்று படம்பார்பதற்காக, மூன்று மணி சினிமாவுக்கு 'ரிசர்வ்' செய்யப்பட்டிருந்த டிக்கட்டுகள், வீணாகப் போய்விடுமோ, என்று அஞ்சியது அந்த அம்மையாரது உள்ளம்!

பகல் 2½-மணிக்கு எல்லோரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். பெற்றோர்கள் சினிமாவுக்குப்போகும் போது கோமளவல்லிக்குஉடல்நில

சரியாக இல்லாததால் அவளை வீட்டிலேயே இருக்க விட்டுவிடுவது, என்று!

மகளுக்கு உடல்நலமில்லாத போது அவளைத் தனியாக விட்டுவிட்டு, கண்ணுசாமிமுதலியார் சினிமாவுக்குச் செல்ல விரும்பவில்லை என்பதென்னவோ உண்மை! ஆனாலும் அவர் சகதர்மிணியோடு சினிமாவிற்குச் சென்றதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று இல்லக்கிழத்தியின் சொல்லைத் தட்டிப்பேசிடத் தைரியமில்லாமை. மற்றொன்று, தானும் மனைவியும் மட்டுமே சினிமாவுக்குப் போவதற்கான பொன்னான வாய்ப்பு கிடைத்ததே என்ற மகிழ்ச்சி!

* * *

முதலியாரும், அவர்தம் மனைவியும், சினிமாக் கொட்டகையை அடைந்தும் காரை அனுப்பிவிட்டனர், தம் மகள் டாக்டரிடம் செல்ல வேண்டும் என்பதற்காக!

மணி ஏறக்குறைய 3-30 இருக்கும்! கோமளவல்லி கணக்கப்பிள்ளையை அழைத்துக்கொண்டு காரிலேறி அமர்ந்தாள்.

"டிரைவர், காரை எடு!"

"எங்கேயம்மா போகவேண்டும்?"

"நேராக ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு!"

கணக்கப்பிள்ளையும், டிரைவரும் ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டனர்!

ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு இவளேன் போகவேண்டும்? —அந்த இருவர் உள்ளத்திலும் ஒரே சமயத்தில் எழுந்த கேள்வி இது!

பதில் அடுத்த கால்மணி நேரத்திற்குள் கிடைத்தது—கணக்கப்பிள்ளைக்கு மட்டும்!

தன்னுடைய மகன் ஆலால சுந்தரன் பாக்கியசாலி என்று தனக்குள்ளே எண்ணிக் கொண்டார்—எண்ணிக்கொண்டாரா, இல்லையில்லை, தன்னுடைய கரங்களிலே திணிக்கப்பட்ட பணக்கத்தை—ரூ. 200, அவ்வாறு எண்ணச் செய்தது அவரை!

ஆலால சுந்தரனும் கோமளவல்லியும் ஒருவரையொருவர் எடுத்து விழுங்கி விடுவதைப் போல் பார்த்துக்கொண்டபார்வை, அன்புப் பிணைப்பின் காணிக்கையாக அந்த இருவர் கண்களிலிருந்தும் வடிந்த கண்ணீர், கணக்கப்பிள்ளையின் கண்களிலும் நீர் துளிர்க்கச் செய்தது — ஆம்! ஆனந்தக் கண்ணீர் அது! ✽

2-ம் பக்கத் தொடர்ச்சி

குடிசைகளை அப்புறப்படுத்தச் சங்கடமாயிருக்கிறது! அப்படித்தானே?" கர்ஜித்துக்கொண்டே அக்கிழவனை நோக்கி நடந்தார் துணைத்தலைவர்.

கிழவன் நடுங்கினான்; அவன் நாடித்துடிப்பு அதிகமாகியது. உடல் வியர்த்தது. அவர் கூறிய 'சுதந்தர மூச்சை' அனுபவிக்க விரும்பியவன்போல பயத்துடன் ஒரு பெருமூச்சுவிட்டான்.

கடைசியாக நகரமன்றத் தலைவர் கடும் குரலில் பேசினார்: "இப்போது புரிந்துவிட்டதா? ஆமாம்; இப்போதே நீங்களாக வேறுஇடம் பார்த்துக்கொண்டு போய்விடுங்கள். இல்லையென்றால் போலீசுதான் உங்களைப் போகவைக்கும்"

"ஏழை படும் துன்பம் உங்களைச் சும்மாவிடாது" என்ற அந்த கிழவனின் கடைசிச் சொற்கள், வந்தவர்களின் காதுகளில் விழுமுன் கார் கிளம்பிவிட்டது.

*

அன்று இரவு அந்தப்பகுதியின் மக்கள் எல்லோரும் மனக்கொதிப்புடன் ஒன்று கூடினர். இளைஞர்களின் இரத்தம் கொதித்தது. தங்களுக்கு வேறு வசதியில்லாத காரணத்தால், என்ன நடந்தாலும் தாங்கள் அந்த இடத்தைவிட்டுக் குடிசைகளை அப்புறப்படுத்தக் கூடாது என்ற ஒருமித்த தீர்மானம் போட்டனர் இளைஞர்கள். வேண்டுமானால் குடிசைகளுக்குப் பக்கத்திலேயே நினைவுச் சின்னத்தை நிறுவிக்கொள்ளட்டும் என்பது அவர்கள் எண்ணம். ஆனால், முதியவர்கள் இளைஞர்கள் எண்ணத்திற்கு மாறுபட்டனர். வீண்வம்பைத் தேடிக்கொள்ளாமல் வேறு இடத்திற்குக் குடிசைகளை அப்புறப்படுத்தத்தான் முதியவர்களுக்கு விருப்பம். ஆனால் எந்த இடத்திற்கு மாற்றுவது என்ற கேள்வி எழுந்தபோதுதான் அவர்களும் இளைஞர்களது முடிவுக்கே ஓரளவு ஒத்துவந்தனர். இதையெல்லாம் நோக்கியபடியே உட்கார்ந்திருந்தான் அந்த கிழவன். ஏதோ ஒரு இருண்ட எதிர்காலம் நெருங்கி வருவதைப்போன்று உணர்ந்தான் அவன்.

*

அடுத்த வாரம் செய்தித்தாள்கள் பின்வரும் செய்திகளைப் பிரசுரித்திருந்தன.

"ஒரு துரோகிகள் கூட்டம் நகருக்கும் மேற்கே உள்ள திறந்தவெளியில் 1857-ம் ஆண்டு சுதந்தர வீரர்களுக்கு நினைவுச்சின்னம் நிறுவுவதைத் தடுக்க எத்தனித்தது. நிலைமையைச் சமாளிப்பதற்காக போலீசு குண்டர்கள் கூட்டத்தின் மீது தடியடிப் பிரயோகம் செய்தனர்.

அதன் பயனாகப் பலபேர் இறக்கும் நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். சிலருக்குப் பெருமளவில் காயங்கள் ஏற்பட்டது."

*

இன்று நகருக்கு மேற்குப் புறத்தில் இருக்கும் திறந்தவெளியில், நாட்டுப்பற்றின் சின்னமான அந்த நினைவுத் தூண் நகருக்கேஅழகூட்டும் வகையில் எழிலுடன் நிற்கிறது. அதன் கீழே இந்த மணிவாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

1857-ல் உயிரிழந்தோரின் நினைவுக்கு:

"நான் அடிக்கடி அப்பக்கம் போகும்போதெல்லாம் அவ்வாசகங்களை இவ்வாறுதான் மாற்றிப் படிக்கிறேன்.

1957-ல் உயிரிழந்தோரின் நினைவுக்கு:

இவ்வாறு தவருகப் படிப்பதை என்மனம் அறியும். என்னசெய்வது! என்னதான் முயன்றுபார்த்தாலும் என்னால் இப்படித்தான் அவ்வாசகங்களைப் படிக்க முடிகிறது! ★

இருட்டு!

சற்று முன்பு 'ஜோ'வென்று பெய்த மழையின் உக்கிரம் தணிந்து விட்டது.

வீசிய பலத்தகாற்று ஓய்வெடுத்துக் கொண்டது.

இடியின் பயங்கரமும், பளிச்சிட்ட மின்னலும் இம்மியும் இல்லை.

நகரத்தை ஒளிமயமாக்கும் மின்சார விளக்குகள் உறங்கிக்கொண்டிருந்தன.

எங்கும் இருட்டு. கண்களுக்கு ஒன்றுமே புலப்படாத கன்னங்கரிய இருட்டு!

புயற்காற்று இல்லாவிட்டாலும், 'சிலுசிலு'ப்பை உண்டாக்கும் வாடைக்காற்று மெதுவாக வீசிக் கொண்டிருந்தது.

மணி எட்டு இருக்கும்.

கனத்த மழைக்கோட்டு அவன் உடலை மறைத்திருந்தது. கழுத்தைச் சுற்றி மப்ளர் இறுக்கிக் கொண்டிருந்தது.

அவன் கையிலே ஒரு பெட்டி. அவன் அணிந்திருந்தவிலையுயர்ந்த அந்தப் பூட்ஸுகள் மழையில் நனைந்து, கனத்துப்போயிருந்தன.

எடுப்பான அவன் தோற்றம்' பார்ப்பதற்கே ஒரு கம்பீரமாக இருந்தது.

அமைதி, அழுத்தமான அமைதி அவன் நடையில் இருந்தது.

ஒரு கடையில் மெழுகுவர்த்தி மங்கலாக எரிந்துகொண்டிருந்தது.

அதை அவன் உற்றுப்பார்த்தான். ஆவன் சிகிரெட் பிடித்து மிக நீண்ட நேரம் ஆகிவிட்டிருந்தது. ஆ! அது எவ்வளவு பெரிய தவறு! கடைக்காரனிடம் சென்று சிகிரெட் வாங்கிக்கொண்டான்.

'மின்சாரக் கம்பியில் பலத்த அந்த மழையினால் எங்கோ பழுது ஏற்பட்டுவிட்டது — அதனால் தான் விளக்குகள் ஏற்றப்படவில்லை' யென்று அந்தக் கடையில் அமர்ந்திருந்த இருவர் பேசிக்கொண்டிருந்தனர்.

சிகிரெட் வாங்கிக்கொண்டு நகர்ந்த ஜேம்ஸின் காதுகளில் இது விழுந்தது. அவன் மெதுவாகச் சிரித்துக்கொண்டான்.

மனிதர்கள் எவ்வளவு நன்றி கொன்றவர்கள்! மின்சாரம் இல்லாததினால்தானே அதைப்பற்றி இன்று பேசுகிறார்கள்! அதைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்! ஆனால்,

சுதத்தன்

உண்மையிலேயே மின்சாரம் எரியும்போது யார் அதைப்பற்றிக் கவலைப்படுகிறார்கள்?

வெயிலில்தான் நிழலின் அருமை தெரிகிறது!

ஜேம்ஸ் சிந்தித்துக்கொண்டே நடந்தான்.

ஜேபியிலிருந்து சிகிரெட் பாக்கெட்டை எடுத்துக் காகிதத்தைப் பிரித்தான். சிகிரெட் ஒன்றைக் கௌவிக்கொண்டு, ஜேபியைத் துழாவினான். அவன் கைக்கு அது தட்டுப்படவே இல்லை. ஒரே ஏமாற்றம்!

அவனிடம் தீப்பெட்டி இல்லை!

வாயில் கௌவிக்கொண்டிருந்த சிகிரெட் மேலும் கீழுமாக அசைந்தது.

திரும்பவும் அந்தக் கடைக்குச் சென்று தீப்பெட்டி வாங்கிவர வேண்டுமென்றால், ஒரு பர்லாங் நடக்கவேண்டுமே!

அருகில் ஏதும் கடை இல்லை. மழை காரணமாக எல்லாம் மூடப்பட்டிருந்தன. யோசிப்பதில் பயன் இல்லை. பெருமூச்சு விட்டபடியே நடந்தான்.

ஒரு திருப்பம். தூரத்தில் யாரோ வருவது போல மங்கலாகத் தெரிந்தது. இருட்டில் சரியாகத் தெரியவில்லை. கொஞ்சம் காத்திருந்தான் ஜேம்ஸ். உருவம் அருகில் வந்ததும், "மிஸ்டர், கொஞ்சம் தீப்பெட்டி தரமுடியுமா?" என்றான், கொஞ்சமும் தயக்கமின்றி.

மெல்லிய சிரிப்பு ஒன்று அவன் செவிகளைத் தொட்டபிறகுதான், தன் தவறு அவனுக்குப் புரிந்தது "ஓ...! தாங்கள் பெண்ணா...? மன்னிக்க வேண்டும்!"

அந்தப் பெண் மீண்டும் சிரித்தாள். "பரவாயில்லை. தாங்கள் எங்கே போகிறீர்கள்?

அவன் கொஞ்சம் தயங்கினான். இந்தக் கேள்வியை அவன் எதிர் பார்க்கவில்லை.

அவளே மீண்டும் பேசினாள். "அவசரமாகப் போகிறீர்களா...?" குயிலின் குழைவு குரலில் பளிச்சிட்டது.

"ஆமாம்... இல்லை..." தன் தடுமாற்றத்தைக் கண்டு அவனுக்கே தன் மீது எரிச்சல் ஏற்பட்டது. சே! கொஞ்சம்கூடத் தைரியமில்லையே!

"எந்த அர்த்தத்தைக் கொள்வது?" கேள்விக் கணை தயக்கமின்றி வெளிப்பட்டது.

"ஏன் இந்தக் கேள்வி...?" கொஞ்சம் தெம்போடு பேசினான்.

"எனக்கு உதவிபுரிய முடியுமா என்று..."

"எதை எதிர்பார்க்கிறீர்கள்...?"

"இருட்டில் தனியாகப் போகப் பயமாக இருக்கிறது. துணைக்கு வரமுடியுமா, தாங்கள்?"

உற்றுப் பார்த்தான் அவளை. இருட்டில் சரியாகத் தெரியாவிட்டாலும் அழகிய ஓர் இளம் பெண்ணாக இருப்பாள் என்று யூகித்துக் கொண்டான். "ஓ! தாராளமாக... எங்கே போகவேண்டும், சொல்லுங்கள்!"

"தங்களுக்குச் சிரமம்."

"இது ஒன்றும் பிரமாதமில்லை என் கடமை அது." ஏதோ ஓர் பெரிய காரியத்தைச் சாதிக்கப் போகிற உறுதி பளிச்சிட்டது குரலில்.

"அப்படியில்லை. அறிமுகமில்லாத—ஏன், இப்பொழுது கூடச் சரியாகப் பார்க்கமுடியாத உங்களை ... வேண்டாம்... வீண் தொல்லை உங்களுக்கு..."

"இதெல்லாம் சகஜம்."

மறுத்துக் கூறவில்லை அவள். இருவரும் அருகருகே நடந்து கொண்டிருந்தனர்.

"இந்த நேரத்தில் தாங்கள் ஏன் வந்தீர்கள்?"

"சினேகிதியின் வீட்டிற்கு வந்தேன். மழை பிடித்துக்கொண்டது. காலையில் போகலாமென்றுதான் பார்த்தேன். எனக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. அவள் அத்தை ஒருமாதிரி. சமையற்காரன் ராபர்டைத் துணைக்கு அனுப்பியிருப்பாள் என் தோழி. பாவம், இன்று அவனுக்கு நல்ல காய்ச்சல்."

"ஓ! தங்களுடைய பெயரை இன்னும் சொல்லவில்லையே......?" அவளை உரசினாற்போல நெருங்கி நடந்தான் ஜேம்ஸ்.

"எமிலி..."

ஈரமண்ணின் வாசனை அவன் நாசியைத் துளைத்தது. மனத்தில் ஒருவித நெகிழ்ச்சியைத் தோற்றுவித்தது. ஏதோ ஓர் கிலுகிலுப்பு நெஞ்சைவருடியது. அவள் தளிர்க் கரங்களைப் பற்றவேண்டுமென்ற துடிப்பு அவனுக்கு மிகுந்தது.

"உங்கள் பெயர்."

"ஜான்," வேண்டுமென்றே மாற்றிச் சொன்னான் தன் பெயரை.

'ஆ!' என்று அரண்டுபோய் அவன்மீது வந்து விழுந்தாள் எமிலி.

அவள் கரங்களை அழுந்தப்பற்றிக்கொண்டு "என்ன...?" என்றான்.

"ஏதோ காலில் இடறியது," அவள் மூச்சு அவன் முகத்துக்கு நேரே பட்டது.

"ஏதாவது கல்லில் இருக்கும்," அவள் உடலை அவன் கரங்கள் மெதுவாக வளைத்துப் பிடித்தன.

ஒன்றுமே கண்களுக்குப் புலப்படாத அந்த மை இருட்டில், அந்த இருவரும் கொஞ்சம் துடித்து நின்றனர்.

"எமிலி......!" அவன் குழைந்தான்.

"ஜான்......!" போதையின் நிறைவோடு வெளிப்பட்ட குரல்.

"மன்னித்துக்கொள். உனக்குக் கலியாணமாகிவிட்டதா?"

அவள் விம்மினாள்.

அவன் பதறிப்போய் விட்டான். அவள் தோளைப் பிடித்துக்கொண்டு உலுக்கினான். "தவறாகக் கேட்டு விட்டேனா? வேண்டாம் எமிலி, வேண்டாம்! என்னை மன்னித்துவிடு!"

பரந்த அவன் முகத்தை வருடியபடி பேசினாள். "இல்லை ஜான். உங்கள்மேல் தவறு இல்லை. எனக்குக் கலியாணமாகிவிட்டது!"

அவன் திணறினான்.

"ஏன் மௌனமாகி விட்டீர்கள்? உங்களுக்கும் திருமணமாகிவிட்டதல்லவா?"

முகத்தருகே விளையாடிய அவள் கரங்களை மார்போடு சேர்த்து அழுத்திக் கொண்டான். "ஆமாம் ஆகிவிட்டது..." துண்டு துண்டாகத் தடுமாற்றத்தோடு வந்தன, வார்த்தைகள்.

குனிந்த அவன் முகத்தோடு முகம் சேர்த்துக் கொண்டாள். "ஜான், என் கணவர் இல்லை. ஈட்டு வருடங்களுக்கு முன்பு, போனவர், சண்டை போட்டுவிட்டு, காட்டிலே காய்ந்த நிலவுபோல என் இளமையைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறேன்!"

அவனை நெருங்கினாள் அவள். இன்பத்தின் நெடி நெஞ்சில் நெருடியது. "ஜான், உங்களை எனக்குத் தெரியாது. என்னை உங்களுக்குத் தெரியாது. வாழ்வைச் சுவைக்க நான் ஒவ்வொரு விநாடியும் எப்படித் துடித்துத் துடித்துச் சாகிறேன். தெரியுமா?" கொதிப்பேறிய அவள் கரங்கள் அவன் கழுத்தை வளைத்துப் பிடித்தன.

இடைவெளி மறைந்தது. முகங்கள் சந்தித்துக் கொண்டன.

நேரம் நடக்கவில்லை, ஓடவில்லை, பறந்தது!

இருட்டு அவர்களுக்குத் துணை புரிந்தது.

இறுக்கம் தளர்ந்தது. கொதிப்பு அடங்கியது.

இருவரும் நடந்தனர்.

அவன் நினைக்காதது தேடி வந்தது; அவள் அலைந்து திரிந்தது, கிடைத்தது!

"ஜான், உங்களை நான் என்றுமே மறக்கமாட்டேன்!"

"நானுந்தான்,"

'நான் விடைபெற்றுக் கொள்கிறேன், ஜான்."

"நானும் கூட வருகிறேன்!"

"வேண்டாம். பிறகு சந்திப்போம்..."

"கண்ணே எமிலி, எனக்கு உன்னை விட்டுப் பிரிவது, வேதனையை அளிக்கிறது."

"வருந்தாதீர்கள். பிரிவு ஏற்பட்டால்தான் பிறகு சந்திக்கும்போது சுவையாக இருக்கும்."

அவள் கரங்களை எடுத்துக் கண்ணில் ஒத்திக் கொண்டான். "என அன்பின் காணிக்கையாக இந்த ஏற்றுக்கொள். நம் சந்திப்பின ஞாபகார்த்தமாக இருக்கட்டும்." தன் விரலிலிருந்து மோதிரத்தை அவள் விரலுக்கு அணிவித்தான்.

பதிலுக்கு அவளும் தன்னுடைய மோதிரத்தை அணிவித்தாள்.

உணர்ச்சியோடு அவள் கரங்களில் தன் இதழைப் பதித்தான் ஜான்.

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... { அலுவலகம் 15 / இல்லம் ...118 }

விடை பெறும்போது இருவரும் பெருமூச்சு விட்டுக் கொண்டனர்!

வெகு நேரத்திற்குப் பிறகு அவன் ஒரு வீட்டினருகே வந்து நின்றான்.

அங்கே இருந்த 'காலிங்' 'பெல்'லை அழுத்தினான்.

சற்றுக் கழித்துக் கதவு திறக்கப்பட்டது.

திறந்த கதவைப் பிடித்துக் கொண்டு ஒரு அழகிய பெண் நின்றிருந்தாள்!

இருவருடைய கண்களும் ஒரு விநாடி வியப்பமையும், திகைப்பையும் பரிமாறிக் கொண்டன.

"ஜேம்ஸ்..." என்றாள் மெல்லிய குரலில்.

"மேரி..." என்றான் அவன் உரத்த குரலில்.

ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். "என்னால் நம்பவே முடியவில்லையே! இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு தங்களைப் பார்ப்பதில் எனக்கு நம்பிக்கையே ஏற்படவில்லை!"

"மிகவும் இளைத்துப் போயிருக்கிறாயே மேரி! உனக்கு மிகவும் துன்பத்தை அளித்துவிட்டேன். உன்னோடு சண்டை போட்டு விட்டுப் போனதும் இராணுவத்தில் சேர்ந்துவிட்டேன். இப்போது தான் எனக்குத் தோன்றியது, வந்துவிட்டேன்!"

அவள் கரங்களை எடுத்துக் கண்ணில் ஒத்திக் கொண்டான்.

ஒரு விநாடி ஆனந்தத்தில் மிதந்தது.

தன் கரத்தால் அவள் கேசத்தை ஒதுக்கிவிட்டான். அப்போது அவன் மிரண்டுபோய் எழுந்தான்.

அவள் திடுக்கிட்டாள்.

அவன் கண்கள் சிவந்தன. "மேரி...!" என்று கத்தினான்.

அவள் நடுங்கிப்போய் எழுந்து நின்றாள்.

அவள் கண்களிலே மிரட்சி. உள்ளத்திலே கலக்கம்.

அவன் ஒரு விநாடி சிலையாக நின்றான். அறிவு சிலுப்பிக் கொண்டு எழுந்தது.

அவள் கரங்களைப்பற்றித் தன் முகத்தில் ஓங்கி ஓங்கி அறைந்து கொண்டான். உள்ளத்தை உடைத்துக்கொண்டு விசும்பல் ஒலி வெளிப்பட்டது.

அவள் திகைத்தாள்!

அவன் அவளையே உற்றுப் பார்த்தான். "மேரி, தவறு உன்னுடையதல்ல. உன்னைத் தனியே தவிக்கவிட்டுச் சென்றது என் குற்றம்தான்!"

ஜேம்ஸ்... தாங்கள் என்ன சொல்கிறீர்கள்...!"

"நான் ஜேம்ஸ் இல்லை...... ஜான்!"

"ஆ...!"

"பயப்படாதே எமிலி. நாம் ஒருவரை யொருவர் புரியாது ஏமாந்து கொண்டோம். உன் கையிலிருந்த அந்த மோதிரத்தைக் கண்டபிறகுதான் நம் தவறு புலப்பட்டது!"

அவள் கண்கள் கலங்கின. "ஜேம்ஸ்; இந்த பாவியை மன்னியுங்கள்"' அவன் கரங்களைப் பற்றிக்கொண்டாள்.

அவன் மெல்லச் சிரித்தான். "மேரி, நாம் இருவருமே தவறு செய்துவிட்டோம். நான் உன்னையோ நீ என்னையோ மன்னிக்கத் தகுதியற்றவர்கள்! நாம்இருவருமே குற்றவாளிகள்!" உணர்ச்சியோடு அவள் கரங்களைப் பற்றிக்கொண்டான்.

அவள் விழிகளில் பெருக்கெடுத்த சூடான அந்தக் கண்ணீர் அவன் நெஞ்சைத் தொட்டது.

✻

திருமண 'மார்க்கெட்'டில்....!

"எனக்குப் பெண் குழந்தைகள் ஏழு—அவர்களில் அறுவருக்கு மிக எளிதில் திருமணம் முடித்துவிட்டேன் — அதற்குக் காரணம் தெரியுமோ — அந்த அறுவருக்கும் நன்றாக ஆங்கிலம் தெரியும்!" என்கிறார், உத்தரப்பிரதேச கவர்னர் வி. வி. கிரி என்பார்!

ஆங்கிலம் தெரிந்த பெண்களுக்கு, மிக எளிதில் திருமணம் முடிந்துவிடுகிறதாம் — மற்றவர்களுக்கு மணாளர்கள் அவ்வளவு எளிதில் கிடைப்பதில்லையாம்.

அவருடைய வார்த்தையை மெய்ப்பிக்கும் முறையில் மற்றோர் நிகழ்ச்சி நடந்திருக்கிறது.

அலகாபாத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர்—28-வயதினர்—ஒருவர்பின் ஒருவராக மூன்று பெண்களை மணந்தாராம்.

அவருடைய 'கைவரிசை'யில் ஏமாந்த மூன்று பெண்களுமே பட்டதாரிகளாம்—நன்றாக ஆங்கிலம் கற்றவர்களாம்! ஒருத்தி பள்ளி ஆசிரியையாம்—மற்றொருத்தி பள்ளி இன்ஸ்பெக்டராகப் பணியாற்றி வருகிறாளாம்.

அவர்கள் ஏமாந்ததற்குக் காரணம், அவர்களுக்குத் தெரிந்த ஆங்கிலம்தான்!

'மணமகள் தேவை" என்று அந்த வாலிபர் பத்திரிகைகளிலே போட்டு விளம்பரங்களின் வாயிலாகக் கிடைத்தனராம், அந்தப் பெண்டிர்!

இந்த மூன்று பெண்களிடமிருந்தும் ரொக்கமாக ரூ. 15,000-மும் நகை வகைகளில் ரூ. 7000-மும் சம்பாதித்தாராம் அந்த வாலிபர்!

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.